Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 03 செவ்வாய்க்கிழமை (18-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:23

## கட்டுக்கட்டாக வாக்குச் சீட்டுகள் குப்பைத்தொட்டிக்குள் இருந்து மீட்பு!

### வவுனியாவில் நேற்றுப் பெரும் பரபரப்பு

வவுனியா,டிசெ.18

புத்தகம் புத்தகமாகக் கட்டப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் குப்பைத் தொட்டியில் கண்டுபிடிக்கப்பட்டன. வவுனியா நகரின் மத்தியில் பஸ் நிலையப் பகுதியில் உள்ள குப்பைத் தொட்டியிலேயே நேற்றுக் காலை வாக்குச் சீட்டுக்கள் புத்தகம் புத்தகமாகக் காணப்பட்டன. இதனால் வவுனியா நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

குப்பை அள்ளச்சென்ற நகர சபை ஊழியர்களின் கண்ணில் இந்த வாக்குச் சீட்டுப் புத்தகங்கள் சிக்கின. அவர்கள் அலறி அடித்துக் கொண்டு ஓடிச்சென்று பொலீஸாரிடம் முறையிட்டனர்.

பொலீஸார் வந்து பார்த்தபோது ஒவ்வொன்றும் 50 வாக்குச் சீட்டுக்களைக் கொண்ட 23 புத்தகங்கள் அங்கு கிடந்தன. அவற்றில் தமிழ்

(10ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் வழங்கிய ஆணை தொடர்பாக

## ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு நடத்த கூட்டமைப்பு முடிவு!

கொழும்பு,டிசெ.18

யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு தமிழ்மக்கள் வழங்கியுள்ள ஆணை குறித்து ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பேச்சு நடத்துவது என்று தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

கொழும்பில் நேற்று மாலை கூடிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்கவும்-

பொருளாதாரத் தடை வதிவிடத் தடை போன்றவற்றை நீக்கவும் -

தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வழங்கியிருக்கும் ஆணையை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் உத்தியோகபூர்வமாகத் தெரிவிப்பது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முதலில் பிரதமரை இன்று அல்லது நாளை சந்தித்து இது குறித்துப் பேசவுள்ளதாக கூட்டமைப்புப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியா, அமெரிக்கா, நோர்வே

(10ஆம் பக்கம் பார்க்க)

### இரு முஸ்லிம் இளைஞர்கள் கொலையின் எதிரொலி:

# அதிரடிப்படையினருக்கு எதிராக கிழக்கில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

## துப்பாக்கிச் சூட்டில் 11பேர் காயம்!! சைக்கிள்கள் சேதம்; பஸ் எரிப்பு!!

அம்பாறை,டிசெம்பர்18

**அம்பாறையில் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட இரு முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதால் சீற்றமடைந்த மக்கள் நேற்று அங்கு பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது.**

**ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது அதிரடிப்படையினர் சுட்டதில் பதினொரு பேர் காயமடைந்தனர். சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் பலத்த சேதமடைந்தன. பஸ் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.**

இந்தச் சம்பவங்கள் தொடர்பாகத் தெரியவருவதாவது:-

நிந்தவூரைச் சேர்ந்த சகோதரர்கள் பிச்சை முஹம்மது நஸீர்(வயது 35), பிச்சை முஹம்மது ஹசன் (வயது 30). இவர்களுள் மூத்தவரான நஸீருக்கும் நிந்தவூரைச் சேர்ந்த யுவதி ஒருவருக்கும் இடையிலான காதல் பிணக்கு நீதிமன்றம் வரை சென்றிருக்கின்றது. ஜனவரி முதலாம் திகதி விசாரணை நடக்கவிருந்தது.

இந்நிலையில் கடந்த சனியன்று விசேட அதிரடிப்படையினர் இருவரையும் கைது செய்தனர். அவர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி சூட்டுச் சம்பவம்; படையினர் ஐவர் சரண்!

கொழும்பு,டிசெ.18

நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்புத் தினத்தன்று கண்டி, உடவளவில் 10 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக படையினர் ஐவர் சரணடைந்துள்ளதாக நேற்று கண்டிப் பொலீஸார் தெரிவித்தனர்.

ஒரு லெப்டினன்ட், ஒரு சார்ஜன்ட் மற்றும் 3 சிப்பாய்கள் ஆகியோரே சரணடைந்துள்ளனர். இவர்கள் கொலைகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

இதேவேளை -

மேற்படி சம்பவத்துடன் தனக்கோ தனது மகன் லோகனுக்கோ எவ்வித தொடர்புமில்லை என்றும் -

எத்தகைய விசாரணைகளையும் எதிர்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாகவும் -

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

ஆனால் லோகன் ரத்வத்தை சம்பவ தினத்தன்று முஸ்லிம் இளைஞர்கள் வந்த வாகனத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தாம் கண்டதாகச் சாட்சிகள் தெரிவித்துள்ளனர். (ஒ)

### அரசியல்வாதிகளிடம் உள்ள

## சட்டவிரோத ஆயுதங்களை ஒப்படைக்க காலஅவகாசம்

கொழும்பு,டிசெ.18

நாட்டில் பாதாள உலகக் கும்பல்களைச் சேர்ந்தவர்கள், அரசியல்வாதிகள் மற்றும் படையில் இருந்து தப்பியோடியவர்கள் ஆகியோர் சட்டவிரோதமான முறையில் வைத்திருக்கும் ஆயுதங்களை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கு காலஅவகாசம் வழங்கப்படவிருக்கிறது.

இவ்வாறு வழங்கப்படும் கால அவகாசத்துக்குள் ஆயுதங்களை ஒப்படைக்காதோர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமரதுங்க இந்தத் தகவலை நேற்று வெளியிட்டார்.

நாட்டின் வன்முறைகளும் மோசடிகளும் அதிகரிப்பதற்குச் சட்டவிரோத ஆயுதங்களே காரணமாகும்.

வன்முறைகளைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் இவ்வாறான சட்டவிரோத ஆயுதங்களைப் பறிமுதல் செய்யவேண்டியது அவசியமானதாகும்.

சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப்பாக்கிகளும் பெருமளவு கைக்குண்டுகளும் பாதாள உலகக் கும்பல்களிடமும், அரசியல்வாதிகள் சிலரிடமும் இருக்கின்றன.

அத்துடன் படைகளில் இருந்து தப்பியோடியோரும் பெருமளவு ஆயுதங்களைச் சட்டவிரோதமாக வைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

### வாக்களிப்பு உரிமை மறுக்கப்பட்டதை எதிர்த்து மனு

கொழும்பு,டிசெ.18

மட்டக்களப்பு மற்றும் வன்னி மாவட்டங்களில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேச மக்கள் நடந்து முடிந்த தேர்தலில் வாக்களிக்க அனுமதிக்கப்படாமைக்கு எதிராகத் தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு அடுத்த வாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவிருக்கின்றது.

இது தொடர்பாகச் சட்ட ஆலோசனைகளை கூட்டமைப்பின் பிரமுகர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அந்தப் பிரதேச மக்களின் வாக்களிப்பு உரிமை மறுக்கப்பட்டமை மனித உரிமையை மீறும் செயல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் கொலைச் சந்தேகநபர்கள் நெடுந்தீவில் தலைமறைவாகியுள்ளனர்!

### யாழ். பொலீஸ் அத்தியட்சகர் தகவல்

கொழும்பு,டிசெ.18

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை மற்றும் தீவுப் பகுதியில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரும் நெடுந்தீவில் ஒளிந்துள்ளனர்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் யாழ். பொலீஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி.

மேற்படி இரு சம்பவங்கள் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை தொடர்பாக ஈ.பி.டி.பியின் பொதுஜன தொடர்பாளர் செபஸ்ரியன் ரமேஷ் (நெப்போலியன்), டானியல மைக்கல் கொலின் (முரளி) ஆகியோர் தேடப்பட்டு வருகின்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### பால்மா விலையை குறைக்க நடவடிக்கை

பால்மா வகைகளின் விலைகளைக் குறைப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக பால்மா இறக்கு மதியாளருடன் வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து பால்மா வகைகளின் விலை விரைவில் 10 ரூபா முதல் 12ரூபா வரை குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ)

## கிழக்கில் பாலம் தகர்ப்பு!

மட்டக்களப்பு,டிசெ.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள சித்தாண்டி - சந்தணமடு வீதிப் பாலம் படையினரால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் போக்குவரத்தைத் தடுப்பதற்காகவே பாலம் தகர்க்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தப் பாலம் தகர்க்கப்பட்டதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குடாவட்டை, சின்னவெளி, சின்னாளம்வெளி, பெருமாவெளி, சிறுதேன்கல் உட்பட பல விவசாயப் பகுதிகளுக்கு விவசாயிகள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இப்பாலம் தகர்க்கப்பட்டுள்ளதால் வாகனப்போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் பல விவசாய நிலங்களுக்கு நீர்பாசன வசதி கிடைக்காமல போயுள்ளது. இதனால் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளன. (ஒ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தேர்தல் முடிவு இன முரண்பாட்டை தீர்ப்பதற்கான கடைசிச் சந்தர்ப்பம்

## சமூக சிரத்தை விடயங்கள் பற்றிய கற்கைக் குழு கூறுகிறது

கொழும்பு,டிசெ.18

இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு வேண்டிய வழி வகைகளை உருவாக்கிக் கொள்வதற்கான கடைசிச் சந்தர்ப்பத்தைத் தேர்தல் முடிவு தந்திருக்கிறது. தேர்தல் முடிவு பற்றி ஆராய்ந்த சமூகப் பிரமாணங்கள் என்ற பெயரிலான சமூக சிரத்தை விடயங்கள் பற்றிய கற்கைக் குழு தெரிவித்திருக்கிறது.

குழுவின் ஆளுநர் சபையில் பேராசிரியர் கா.சிவத்தம்பி, பி.சிவகுமார், மேர்வின் மகேசன் ஆகியோர் இருக்கிறார்கள். அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள். அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேர்தல் எதிர்பார்த்தபடியே மிகுந்த வன்செயல் நிரம்பிய தேர்தலாக மாறியிருந்தது. இலங்கை வரலாற்றிலேயே அதிகளவிலான வன்செயல்கள் பதிவு செய்யப்பட்ட தேர்தலாக, அதிகளவிலானவர்கள் கொல்லப்பட்ட தேர்தலாக இத்தேர்தல் நடைபெற்று முடிந்தது. சிங்களப் பிரதேசங்களுக்கு ஈடான அளவுக்கு தமிழ்ப் பிரதேசங்களில் வன்முறை இடம்பெறாவிடினும் அங்கும் வன்முறையின் கரங்கள் படிந்திருந்ததை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் பதிவு செய்திருந்தது.

### விடுதலைப் புலிகள்

இம்முறை தேர்தலின் மையமாக விடுதலைப் புலிகள் மாறியிருந்தனர். பொதுஜன ஐக்கிய முன்னணி இனவாதத்தை வெளிப்படையாகவே கையிலெடுத்திருந்தது. அது தனது பிரசாரத்தில் ஐ.தே.கட்சிக்கும் புலிகளுக்கும் இடையே நாட்டைத் துண்டாடுவதற்கான இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருப்பதாக அரச ஊடகங்களைப் பாவித்து பாரிய பிரசாரத்தில் இறங்கியது. ஜே.வி.பியும் அந்தப் பிரசாரத்தை வளர்த்தது. ஆயினும் இந்தப் பிரசாரம் இம்முறை தேர்தலில் அக்கட்சிகளுக்கு வெற்றி வாய்ப்பைக் கொடுக்கவில்லை. அதேபோல கடந்த தேர்தலில் ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியிருந்த சிஹல உறுமய அந்த ஆசனத்தை இம்முறை இழந்துவிட்டது. அதேபோல பூமி புத்ரவினாலும் தங்களுக்கான வாக்குகளைத் தேடிக்கொள்ள முடியவில்லை. அதாவது போரினூடாக இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர இருப்பதாக கூறிய கட்சிகள் பெரிய வெற்றி எதனையும் பெறமுடியவில்லை. அதேவேளை புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதாகக் கூறப்பட்ட ஐ.தே.கட்சி பெருமளவிலான வெற்றியை ஈட்டியுள்ளது. ஆனால் இவற்றிற்கிடையே மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவு கூடியிருப்பது கண்கூடு.

### ஈ.பி.டி.பி.

இதேவேளை -

வடக்கு - கிழக்கில் ஈ.பி.டி.பி. மக்களின் இருப்பியல் தேவைகளை வலியுறுத்தி அதனை முக்கியப்படுத்தத் தொடங்கிற்று.

இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னுமொரு விடயத்தையும் குறித்துக் காட்டவேண்டும். அநுராதபுரம் மற்றும் எல்லைப் புறக் கிராமங்களில் இடம்பெற்ற வன்செயல்கள் ஊடாக சிங்கள மக்களிடையே அதிருப்தியை சம்பாதித்துக்கொண்ட விடுதலைப் புலிகள் அண்மைக்காலத்தில் சிங்கள மக்களுடனான உறவில் காட்டி வரும் மாறுதல் முக்கியமானதாகும். இது 2000ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் தொட்டுச்செல்லப்பட்டதாயினும் இம்முறை மாவீரர் தின உரையில் அது சிங்கள மக்களுக்கான ஓர் அறைகூவலாக விரிந்து வந்திருக்கிறது.

சமாதானம் வேண்டும் என்று நிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்துக்கும் எதிரான சக்திகளுக்கும் இடையேயான போட்டியாக இத்தேர்தல் இருக்கிறது. சிங்கள மக்கள் போர் வெறி கொண்ட இனவாத சக்திகளை ஒதுக்க முன்வரவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னதான தனது மாவீரர் தின உரையில் அறைகூவல் விடுத்திருந்தார் இது எதிர்கால அரசியலுக்கு ஓர் ஆரோக்கியமான குறிகாட்டி.

### அரசியல் அலை

வடக்கு - கிழக்குக்கு வெளியே ஐ.தே.கட்சி பெருவெற்றியை ஈட்டிக்கொண்டது. வடக்கு - கிழக்கு முழுவதிலும் பகுதி 2இல் குறிப்பிட்டவாறு தமிழர் கூட்டமைப்பு அரசியல் அலை காரணமாக பெருவெற்றி பெற்றது. அது மொத்தமாக 15 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஓர் ஆசனம் கிடைத்தமை தமது இருப்பியல் தேவைக்கான வாய்ப்பை அது பெற்றுக்கொடுக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்ததாக ஒருவர் விவாதிக்கக் கூடும். குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு பொருள்கள் கொண்டுசெல்வது வருவதில் உள்ள நெருக்கடி மகேஸ்வரனுக்கு ஓர் ஆசனத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளதாக அந்த விவாதம் இருக்கக்கூடும். எனினும் அவருடைய தேர்தல் காலப் பிரசாரங்களை அவதானித்தால் அரசியல் அலையே அங்கும் தீர்மானகரமான பாத்திரத்தை வகித்திருப்பதைக் காணலாம்

ஈ.பி.டி.பியானது அது எதிர்பார்த்ததைப் போல நான்கு அல்லது ஐந்து ஆசனங்களைப் பெற முடியவில்லை. ஆக இரண்டு ஆசனங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது.

வவுனியாவில் கடந்த காலங்களில் தன்னுடைய நடவடிக்கைகள் காரணமாக புளொட் இயக்கம் மக்களிடையே நன்மதிப்பைப் பெறுவதில் கணிசமான இடர்பாடுகளைக் கொண்டிருந்தபோதிலும் அங்கு சித்தார்த்தனுக்கு ஓர் இடம் கிடைத்துள்ளது.

இம்முடிவுகளின் அடிப்படையிலேயே நாம் இத்தேர்தலை விளங்கிக்கொள்ள வேண்டும். தமிழர் கூட்டமைப்பு இத்தேர்தலில் வெற்றி பெறும் என்பது எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வெற்றிபெற்ற இத்தமிழர் கூட்டமைப்பு எந்தளவுக்கு கருத்தொருமைப்பாடு கொண்ட கூட்டமைப்பு என்று நாம் பார்க்க வேண்டும். இக்கூட்டமைப்பில் பெயரும் சின்னமும் கூட்டணியே தவிர, இது 1977இல் இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி அல்ல. இன்று இந்தக் கூட்டணியில் 4 ரெலோ உறுப்பினர்கள், 3தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள், ஓர் ஈ.பி.ஆர்.எல்.எவ்.உறுப்பினர் என அது பல நிறங்களைக் கொண்டதாக இருக்கிறது.

இந்நிலையில் தமிழர் கூட்டமைப்புக்குள் உள்ள பன்முகப்பாடு ஓங்கி வருவது உணர்ந்து கொள்ளப்பட வேண்டியது.

சமாதானப் பேச்சுவார்த்தையில் தமக்கு முக்கிய இடம் தேவையில்லை என்று முன்னர் சொல்லிய கூட்டமைப்புதான் எந்த இலக்கை முக்கியப்படுத்தியதோ அந்த இலக்கை நோக்கிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவேண்டுமேயொழிய அதிலிருந்து விலகுதல் அது மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளைச் சாத்தியப்படுத்த உதவாது. தமிழ் மக்களுக்கான தீர்வு பற்றிய விடயங்களில் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் ஒரு நிலைப்பாடாகச் செயலாற்ற வேண்டும்.

### சமாதானம்

மொத்தத்தில் சிங்கள மக்கள் போர் வேண்டாம் சமாதானமே தேவை என்கிற தொனியில் தேர்தலில் தமது தீர்ப்பை வழங்க, தமிழ்ப் பிரதேசங்களிலோ வடக்கு - கிழக்கு என்கிற பேதமின்றி எங்களுக்கு அடிப்படையான உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய அரசியல் பிரச்சினை உண்டு என்று தமது தெரிவினூடாக வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இன்னொரு வகையில் சொல்லப்போனால் நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பயன்படுத்தி இந்த இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான வழி வகைகளை உருவாக்கிக் கொள்வதற்கான ஒரு கடைசிச் சந்தர்ப்பத்தை மக்கள் கொடுத்திருக்கிறார்கள். இது தான் அதற்கான கடைசிச் சந்தர்ப்பமாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

## யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிக் கற்கை மாணவர்களுக்கு!

யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளிவாரியாகப் பதிவு செய்த முதற்தேர்வு மற்றும் பகுதி I மாணவர்களிடமிருந்து பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலைமுதற் தேர்வு, கலைமாணி - பகுதி I, கலைமாணி II, வணிக முதற்தேர்வு, வணிகமாணி - பகுதிI ஆகியவற்றில் 2000ஆம் ஆண்டு கற்கை நெறிகளுக்கான பரீட்சைகள் யாழ். பல்கலைக்கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் இடம்பெறவுள்ளன. இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை யாழ்பல்கலைக்கழக வெளிவாரிப்பதிவுகள், பரீட்சைகள் அலகில பெற்றுக்கொள்ளலாம் என்றும் - விண்ணப்பங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டுமென்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## மினிபஸ்ஸில் தவற விடப்பட்ட கைப்பை

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பாதையில் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ் ஒன்றில் இருந்து பெண்கள் கைப்பை ஒன்று ஒரு தொகைப் பணத்துடன் கண்டெடுக்கப்பட்டு மினிபஸ் உரிமையாளரால் அச்சுவேலி தனியார் மினிபஸ் சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடந்த சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ் நகரில் இருந்து அச்சுவேலி சென்ற மினி பஸ்ஸிலேயே இந்தக் கைப்பை கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-180)

# தமிழ்க் கூட்டமைப்பினர் பொறுப்புணர்ந்து கருத்துக் கூறவேண்டும் என்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம்,டிசெ.18

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் தமது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து செயற்படவேண்டும். இதற்கு மாறாக அவநம்பிக்கையும் விரக்தியும் தொனிக்கும் வகையில் கருத்துத் தெரிவிப்பது தமிழ் பேசும் மக்களை ஏமாற்றத்துக்குள்ளாக்கும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

பேச்சுக்கு வருவதாயின் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடவேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்த கூற்றுக்கு தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துத் தொடர்பாக விடுத்த ஓர் அறிக்கையிலேயே டக்ளஸ் தேவனந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தமிழ்பேசும் மக்கள் பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்காகவே கடந்த தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

எனவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பாகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் தமது பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து கொண்டு செயற்படவேண்டும் இதற்கு மாறாக அவநம்பிக்கையும் விரக்தியும் தொனிக்கும் வகையில் கருத்துத் தெரிவிப்பது தமிழ்பேசும் மக்களை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கும்.

வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர்கள் தெரிவித்துள்ள விடயங்கள் தமிழ் பேசும் மககள் மத்தியில் ஏமாற்றத்தையே ஏற்படுத்தும். சமாதானப் பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும்? நிம்மதியான வாழ்வு எப்போது கிடைக்கும் என்ற ஏக்கத்துடன் இருக்கும் மக்களின் மத்தியில் மீண்டும் போர் மூளுமோ என்னும் ஐயத்தையே தோற்றுவிக்கும்.

பேரினவாதக் கட்சிகள் கடந்த காலங்களில் பேசியதைப்போன்றதே புதிய வெளிவிவகார அமைச்சரின் கருத்து என்று கூறுவதும், புதிய அரசாங்கம் கூட சமாதானப் பாதையில் இருந்து நழுவிவிடுமோ என்று சந்தேகம் கிளம்புவதும், புலிகள் போரைத் தொடரவேண்டும் என்பதற்கான தூண்டுகோல் போலவே இருக்கிறது. மேலும் தற்போது ஆங்காங்கே இடம்பெறும் மோதல் சம்பவங்களைத் தொடரவிடாமல் தடுப்பது எப்படி என்பது குறித்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புத் தலைவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

இதேவேளை குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பன பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. யாழ்ப்பாண அரசாங்க செயலகம், பிரதேச செயலகம் என்பன போன்றவற்றை முற்றுகையிட்டு செயலிழக்க வைக்கப்போவதாக எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன. இவை போன்ற பிரச்சினைகள் தொடர்பாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பிரதிநிதிகள் அக்கறை காட்டுவதாகத் தென்படவில்லை. மாறாகத் தேசியப் பட்டியல் பிரதிநிதித்துவம் எவருக்கு? பிரதம கொறடா பதவியைப் பெறுவது யார்? என்பன போன்ற விவகாரங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மூழ்கிப் போய் இருப்பதும், அமைச்சர்களின் கருத்துக்களைச் சுட்டிக் காட்டி அவநம்பிக்கை தெரிவிப்பதும் ஆரோக்கியமான எதிர்காலத்துக்கு வழிவகுத்து விடாது - என்றுள்ளது. (ஐ-3)

## கிளாலிப் பகுதியில் நடந்த மோதலில் 2 படையினர் காயம்!

கொழும்பு,டிசெ.18

கிளாலிப் பகுதியில் கடந்த சனிக்கிழமை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இரு படையினர் காயமடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை அவதானித்த படையினர் 81 மி.மீ மோட்டார், சிறு ஆயுதங்கள் ஆகியன கொண்டு தாக்கியதாகவும்-

விடுதலைப் புலிகளும் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் - ஊடகத் தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

(ஒ-3)

## 'ஒ-பொசிடீவ்' இரத்தம் தேவை

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ் .போதனா வைத்தியசாலை - இரத்த வங்கிக்கு 'ஒ-பொசிடீவ்' ரக குருதி அவசரமாகத் தேவைப்படுவதாக இரத்த வங்கி அறிவித்துள்ளது.

இரத்த தானம் செய்ய விரும்புவோர் இரத்த வங்கிக்கு வந்து வழங்கி உதவுமாறு இரத்த வங்கி வைத்திய அதிகாரி அறிவித்திருக்கிறார். (ஐ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று க.பொ.த. (உயர்தரம்) 2001இல் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். பல்கலைக்கழகப் பீடங்களுக்குத் தெரிவு நிலையை எய்திய அனைவரையும் 1?.01.2002 இல் பாடசாலையில் நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். வரவினைப் பாடசாலை நாள்களில் உறுதிப்படுத்தவும்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை (96051) அதிபர், ஆசிரியர்கள் - பாடசாலைச் சமூகம்.


### இடமாற்றம் செய்யப்பட்டுள்ள

# தென்மராட்சி வலய மாணவர்களின் பரீட்சை நிலையங்களின் விவரம்

தென்மராட்சி,டிசெ.18

நாளை மறுதினம் வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் தென்மராட்சிக் கல்வி வலய மாணவர்களின் பரீட்சை நிலையங்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த கைதடி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் அமையவிருந்த பரீட்சை நிலையங்கள் வடமராட்சி, வலிகாமம் பகுதிகளுக்கு இடமாற்றப்பட்டுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.

முன்னர் அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களும் புதிதாக அமையவுள்ள பரீட்சை நிலையங்களின் விவரமும் வருமாறு:-(புதிய பரீட்சை நிலையங்களின் விவரம் அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ளது.)

★ யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி. - (யா/நெல்லியடி மெ.மி.த.க.பா.)

★ யா/சாவ. இந்துக் கல்லூரி மண்டப இல.1 - (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி.)

★ யா/சாவ. இந்துக் கல்லூரி மண்டப. இல.2 - (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி.)

★ யா/சாவ. டிறிபேக் கல்லூரி -(யா/கரணவாய் பொன்னம்பல வித்தி.)

★ யா/மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. - (யா/சரவெட்டி விக்னேஸ்வரா ம.வி.)

★ யா/சாவ. மகளிர் கல்லூரி - (யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தி.)

★ யா/வரணி ம.வி. மண்டப இல.1- (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி.)

★ யா/வரணி ம.வி. மண்டப இல.2 - (யா/கரணவாய் பொன்னம்பல வித்தி.)

★ யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. மண்டப இல.1 - (யா/யாக்கரு விநாயகர் வித்தி.)

★ யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. மண்டப இல.2 - (யா/கரவெட்டி ஞானசாரியார் வித்தி.)

★ யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. மண்டப இல.1 - (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

★ யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. மண்டப இல.2 - (யா/வட. இந்து மகளிர் கல்லூரி)

★ யா/கச்சாய் அ.த.க. பா. - (யா/இமையாணன் அ.த.க.பா.)

★ யா/உசன் இராமநாதன் ம.வி. - (யா/தேவரையாளி இந்துக் கல்லூரி)

★ யா/பளை மத்திய கல்லூரி மண்டப இல.1 - (யா/புலோலி றோ.க.த.க. பா.)

★ யா/பளை மத்திய கல்லூரி மண்டப இல.2 - (யா/புலோலி றோ.க.த.க. பா.)

★ யா/வேம்பொடுகேணி அ.த.க. பா.- (யா/புலோலி மெ.மி.த.க.பா.)

இதேவேளை -

வலிகாமத்தில் கல்வி கற்கும் தென்மராட்சி மாணவர்களுக்கான பரீட்சை நிலையங்களின் மாற்றம் குறித்த மற்றொரு செய்தி ஏழாம்பக்கத்தில் வெளியாகியுள்ளது.(க-7-117)

# கந்தகார் நகரில் ரமழான் நிகழ்வுகள்

காபூல்,டிசெ.18

புனித ரமழான் மாத நிறைவை யொட்டி ஆப்கானிஸ்தானின் கந்தகார் நகரப் பள்ளிவாசல்களில் தீவிர பாதுகாப்பின் மத்தியில் சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஆயிரக்கணக்கான வடக்குக் கூட்டணிப் படையினர் கந்தகார் நகர வீதிகளில பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தனர். நவீனரக ஆயுதங்களுடன் 30 மீற்றருக்கு ஒரு சிப்பாய் என்ற ரீதியில் முக்கிய வீதிகளில் வடக்குக் கூட்டணிப் படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர்.

கந்தகாரில் புதிய ஆளுநர் ஜல் அஹா தொழுகைக்காக நகரின் பெரிய பள்ளிவாசலுக்குச் சென்ற சமயம் அவருக்குப் பாதுகாப்பாக 20 இராணுவ வாகனங்கள் சென்றன. இறுதியில் அமெரிக்கப்படையினரின் கவச வாகனம் ஒன்றும் பாதுகாப்புக்காகச் சென்றது.

இதேவேளை -

புதிய ஆளுநரின் கீழ் கந்தகார் நகரின் பாதுகாப்புக்கென 5ஆயிரம் பேரைக் கொண்ட பாதுகாப்புப்படை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.(ம-9)

## பாகிஸ்தான் மீது ஆப்கான் ஆவேசம்

ஆப்கானில் தலிபான் ஆட்சி அமையக் காரணமாக இருந்த நாடு பாகிஸ்தான். பாகிஸ்தானின் முழு ஒத்துழைப் போடுதான் ஆப்கானில் தலிபான் ஆட்சி அமைந்தது. எனவே நாடு கெட்டு குட்டிச் சுவராகப் போனதற்கு பாகிஸ்தான் மறைமுகக் காரணம் என்று ஆப்கன் மக்கள் நம்புகிறார்கள்.

கையில் கிடைக்கும் பாகிஸ்தானியர்களை எல்லாம் உதைப்பது என்ற முடிவோடு ஆப்கன் மக்கள் அலைகிறார்கள். இந்தியர்களைக் கூட தவறுதலாக பாகிஸ்தானியர்கள் என்று நினைத்து அடிக்கப் போவதும் அவர்கள் தங்களை இந்தியர்கள் என்று அடையாளம் காட்டியதும் அவர்களை விட்டுவிடுவதும் அடிக்கடி நடந்துவருகிறது. (ம)

# தோரா போரா மலைப்பகுதி எதிரணிப் படைகள் வசம்

## அல்கெய்டா அமைப்பினர் தப்பியோட்டம்



காபூல்,டிசெ.18

அல்கெய்டா அமைப்பினரின் கடைசி நிலையாக இருந்த தோரா போரா மலைப் பகுதிகளை எதிரணிப் படைகள் கடும் சண்டையின் பின்னர் கைப்பற்றியுள்ளனர். இந்தப் பகுதி ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல குகைகளைக் கொண்டிருப்பதால், இந்தக் குகைகளின் வழியாக ஆயிரக்கணக்கான அல்கெய்டா அமைப்பினர் தப்பியோடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.



வடக்குக் கூட்டணிச் சிப்பாய்.

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் உள்ள தோரா போரா மலைப் பகுதியே அல்கெய்டா அமைப்பினரின் இறுதிப் புகலிடமாக இருந்தது. அங்கிருந்தும் அவர்கள் விரட்டியடிக்கப்பட்டு விட்டதனால் ஆப்கானிஸ்தானின் முழுப் பகுதியும் எதிரணிப் படைகள் வசம் வந்துள்ளன.

தொடர் குகைகளைக்கொண்ட தோரா போரா பகுதியில் எஞ்சியுள்ள அல்கெய்டா அமைப்பினரைத் தேடிக் கண்டுபிடித்து அழிப்பது என்பது மிகக் கடினமான செயல் என்பதால் அமெரிக்க விமானங்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் கடும் விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன.




தோரா போரா பகுதியில் இறுதியாக இடம்பெற்ற தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான அல்கெய்டா உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக எதிரணித் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

"எமது மண்ணிலிருந்து அல்கெய்டா அமைப்பினரைத் துடைத்தழித்து விட்டோம். நாங்கள் எங்கள் பணியை நிறைவுசெய்துள்ளோம்" என்று தெரிவித்தார் ஹாஜி மொஹமட் சமன் என்ற அந்தத் தளபதி.


"இன்று அல்லது நாளை நாம் பின்லேடனைப் பிடித்து விடுவோம்" என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் -

அமெரிக்கப் பாதுகாப்புச்செயலர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு காபூலில் உள்ள அமெரிக்கத் தளத்துக்கு வந்துள்ளார். அவரது விஜயம் குறித்த மேலதிக விவரங்கள் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை -

தோரா போரா மலைப் பகுதியில் மறைந்துள்ளதாகக் கூறப்படும் ஒஸாமா பின்லேடனைக் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் அமெரிக்க மற்றும் எதிரணிப் படைகள் தீவிரமாக உள்ளன. "நாம் அங்குலம் அங்குலமாக பின்லேடனைத் தேடிவருகின்றோம்" - என்றார் அமெரிக்கத் தளபதி ஒருவர். (ம-9)



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள ஆதரவற்றோர் இல்லம் ஒன்றில் ரமழானை முன்னிட்டு வழங்கப்படும் விசேட உணவுக்காக வரிசையில் காத்திருக்கும் ஆப்கானியச் சிறார்களைப் படத்தில் காணலாம்.

பல வருடங்களாகத் தொடரும் போரால் தமது தாய், தந்தையர்களை இழந்துநிற்கும் இந்தச் சிறார்களுக்கு தலிபான்களின் இறுக்கமான கட்டுப்பாடுகளிலிருந்து இப்போதுதான் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் போர் காவுகொண்ட இவர்களது பெற்றோரை யார் மீட்பார்கள்? (ம)

# பரகுவே சிறைச்சாலையில் கலவரம்; 23பேர் உயிரிழப்பு, 250பேருக்கு காயம்

அஸங்ஷன்,டிசெ.18

பரகுவேயின் சிறைச்சாலையில் இடம்பெற்ற கலவரத்தில் குறைந்தது 23பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் 250 பேர் வரை காயமடைந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

சிறைக் கைதி ஒருவருக்கும், காவலாளி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கலவரத்தில் முடிந்ததாகத் தெரியவருகிறது.

இதுபற்றி மேற்படி சிறைச்சாலையில் கைதாகியிருக்கும் நபர் ஒருவர் தொலைக்காட்சிக்குப் பேட்டி அளிக்கையில், தமது சக நண்பரொருவர் சிறைக் காவலாளியால் கொலலப்பட்டதையடுத்தே கலவரம் மூண்டதாகக் கூறினார்.

ஆனால் சிறைச்சாலை அதிகாரிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். சிறைக் கைதியைச் சோதிக்க சிறைக் காவலாளி முற்பட்டார் என்றும் அதற்குக் கைதி மறுத்ததையடுத்து காவலாளி ஆகாயத்தை நோக்கிச் சுட்டதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

காயமடைந்தோரில் 50 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது. (ம)

உலக அரங்கில்

# இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதலை நிறுத்தக் கோருகின்றார் அரபாத்

ஜெருசலேம்,டிசெ.18

இஸ்ரேலியர்களுக்கு எதிரான சகல தாக்குதல்களையும் நிறுத்துமாறு பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் கோரியுள்ளார். அதேபோன்று பலஸ்தீனர்களுக்கு எதிரான தாக்குதல்களை இஸ்ரேலும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.



புனித ரமழானை முன்னிட்டு பலஸ்தீனத் தொலைக்காட்சியில் அரபாத் உரையாற்றினார்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைத் தாம் எப்போதுமே கண்டித்து வந்ததாகவும் அத்தகைய தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தபபட வேண்டும் எனவும் பலஸ்தீனத் தீவிரவாத அமைப்புக்களிடம் அரபாத் கோரிக்கை விடுத்தார்.

கடந்த 15 மாத காலமாகத் தொடரும் மத்திய கிழக்கு வன்முறைகள் முடிவுக்குவர பேச்சுக்களே சிறந்த வழி என்று குறிப்பிட்ட அரபாத், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் நிபந்தனையற்ற பேச்சுக்களை நடத்த முன்வரவேண்டும் என்றும் சொன்னார். (ம-9)

# சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த மாநாடு டோக்கியோவில் ஆரம்பம்

டோக்கியோ,டிசெ.18

சிறுவர்களைப் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபடுத்துவது தொடர்பான சர்வதேச மாநாடு டோக்கியோவில் நேற்று ஆரம்பமானது.

137 நாடுகளைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர்.

சிறுவர்களைப் பாலியல் வர்த்தகம் உட்பட தொழில் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிராகப் பணியாற்றுவது என்று ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஜப்பானில் நடைபெற்ற இதுபோன்றதொரு மாநாட்டில் எடுத்துக்கொள்ளப்பட்ட தீர்மானம் நேற்று மீண்டும் உறுதி செய்யப்பட்டது.

பல கோடிக்கணக்கான டொலர் சம்பந்தப்பட்ட வியாபாரமாக உலகெங்கும் பரவிய ஒரு குற்றச்செயலாக சிறுவர் விபச்சாரம், கடத்தல் என்பவற்றுக்குத் தீர்வு காண்பது கடினமானது என்று ஐ.நா. சிறுவர் நிதிய நிறைவேற்றுப் பணிப்பாளர் நேற்றைய மாநாட்டில் தெரிவித்தார்.

சிறுவர் தொடர்பான குற்றச் செயல்களையும், பயங்கரவாதச் செயல்கள என விவரிக்கலாம் என்று கூறிய அவர் அகதிகள், கைவிடப்பட்ட சிறுவர்கள் வீட்டில் பணிபுரியும் சிறுவர்கள், போரில் பணிபுரியும் சிறுவர்கள் என்று பல வகையான சிறுவர்கள் வர்த்தக ரீதியில் பாலியல் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாக அவர் சொன்னார்.

முன்னர் விலைமாதாக இருந்த ஒரு பெண் தனக்குச் சிறுவயதில் கனடாவில் ஏற்பட்ட அனுபவத்தை மாநாட்டில் விவரித்தார். (ம)

# நாடாளுமன்றத் தாக்குதலின் பின்னால் பாக்.உளவு அமைப்பு

## குற்றஞ்சாட்டுகிறது இந்தியா

புதுடில்லி,டிசெ.18

இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ. இருப்பதாக இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத் தாக்குதலுக்குத் திட்டத்தைத் தீட்டிய நான்கு தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் -

அவர்களிடம் விசாரணை நடத்தியதில் தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் உளவு அமைப்பு இருந்ததாகவும் -

டில்லி மாநகர பொலீஸ் கொமிஷனர் அஜய்ராஜ் சர்மா தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட ஐந்து தீவிரவாதிகளும் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் கூறினார்.

மொஹமட் அவ்ஸல், பேராசிரியர் அப்துல் ரஹ்மான் டிலானி, ஷௌக்கஸ் உசைன், அவரது மனைவி நவ்ஜோத் ஆகியோரே டில்லிப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐயிடமிருந்து நேரடியாகக் கட்டளைகளைப் பெற்று வந்ததாகப் பொலீஸார் குற்றஞ்சாட்டுகின்றனர்.

1999 ஆம் ஆண்டு டிசெம்பரில் இந்தியன் ஏயார் லைன்ஸ் விமானத்தைக் கடத்துவதில் சம்பந்தப்பட்டிருந்த ஒருவரும் நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்டு உயிரிழந்திருந்தார் என்று கூறும் பொலீஸார்; அந்த விமானத்தைக் கடத்தியதன் மூலம் விடுவிக்கப்பட்ட மௌலானா மசூத் என்ற தீவிரவாதியே இந்தத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கி நடத்தியதாகவும் -

அவர்கள் முதலில் இந்திய விமான நிலையத்தைத் தகர்க்கவே திட்டமிட்டிருந்ததாகவும் - தெரிவித்தார். (ம-9)

## பாகிஸ்தான் எல்லையில் இருக்கும் தீவிரவாத முகாம்களை தாக்க தயாராகின்றது இந்திய அரசு?

புதுடில்லி,டிசெ.18

பாகிஸ்தான் - இந்திய எல்லையில் உள்ள தீவிரவாதிகளின் முகாம்களைத் தாக்கப்போவதாக இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கையிலேயே அதவானி இதனைத் தெரிவித்தார்.

நாட்டிற்கு வெளியே முகாம்களை அமைத்துக்கொண்டு நாட்டுக்கு உள்ளே செயற்பட்டுவரும் தீவிரவாதிகளைத் துரத்திப் பிடிக்கும் யோசனையும், பரிசீலனையில் உள்ளதாக அத்வானி அந்தப் பேட்டியில் தெரிவித்தார்.

வெளிச் சக்திகளின் தூண்டுதல்களால் அழிவு அல்லது நாசவேலைகள் இடம்பெற்றால் அதற்கெதிராக நடவடிக்கையெடுக்க சர்வதேச சட்டத்தில் இடம் உள்ளது என்றும் அத்வானி கூறினார்.

அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எனக் கூறிக்கொண்டு ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை நடத்திவருவது போன்று இந்தியாவும பாகிஸ்தானில் தாக்குதல்களை நடதத்தக்கூடும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

இத்தகைய தாக்குதல்களை இந்தியா அவசரப்பட்டு ஆரம்பிக்கக்கூடாது என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

தன்னைத் தற்காத்துக்கொள்ளும் உரிமை இந்தியாவுக்கு இருக்கின்றது. ஆனால் இந்த விடயத்தில் இந்தியா தாக்குதல்களை ஆரம்பித்தால் அது இரு நாடுகளுக்கும் இடையிலான போராக மாறிவிடும் என்றும் பவல் மேலும் தெரிவித்தார். (ம-9)

## உல்லாசத்தைத் தவிர்க்கும் மக்கள்... பொருளாதாரம் வீழ்ச்சி...

# வெகுவாக மாறிவிட்டது அமெரிக்கா...

7

முகப்பூச்சுப் பவுடரைக் கண்டாலே அந்திரெக்ஸ் கிருமியா என அஞ்சும் அளவிற்கு அமெரிக்கர்கள் மிரண்டு போய் இருக்கிறார்கள். அந்திரெக்ஸ் (anthrax) எனப்படும் நோய் கால்நடைகளில் அதுவும் பிரதானமாக



சுவாசப்பையில் பரவிய அந்திரெக்ஸ் பக்ரீரியா

ஆசியப் பிரதேசங்களில் **Bacillus anthracis** எனப்படுகின்ற கிருமியினால் (பக்ரீரியா) ஏற்படுகின்றது. நோயினால் இறந்த ஆடு, மாடுகள், ஒட்டகங்கள் புதைக்கப்பட்ட பிரதேசங்களில் இக்கிருமிகள் பல காலம் உறங்குநிலையில் இருக்கும். இவற்றைச் சேகரித்து பதப்படுத்துவது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியமல்ல.



அந்திரெக்ஸ் பீதி

இது தூள்வடிவமான பதார்த்தங்களுடன் கலந்து விஷமிகளால் பரப்பப்படும்போது அதனை முகர்ந்தால் இலகுவாக சுவாசப்பையில் தொற்று ஏற்பட்டுவிடுகின்றது. நோய் கொண்ட விலங்குகளின் இறைச்சியை உண்டதாலும் தொற்று ஏற்பட வாய்ப்பு உண்டு. விரைவில் பரவும் இந்த நோயினால் தோலில் மாறாத புண்கள் ஏற்படும். உள்ளுடல் தாக்கங்களும் விரைவில் மரணத்தை ஏற்படுத்தும்.

நோயினால் இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்தி புதைப்பவர்களுக்கும் தோலில் காயங்கள் இருப்பின் நோய் தொற்றும் வாய்ப்புக்கள் உண்டு. இத்தகைய நோயை அமெரிக்காவில் உயிரியல் ஆயுதமாகத் தீவிரவாதிகள் பரப்ப முனைவதான பரபரப்பு எழுப்பியுள்ள அச்சம பாரதூரமானது. இதுவும் அமெரிக்கப் பொருளாதாரத்தைச் சும்மாவிடப் போவதில்லை.

அமெரிக்காவில் பொருளாதார நிலைமை எப்படி இருக்கின்றது?

மக்கள் உல்லாசங்களைத் தவிர்க்கப் பார்க்கிறார்கள். விமானம் ஏற அஞ்சுகிறார்கள். விடுமுறைகளை வீட்டிலேயே குடும்பமாகக் குதூகலித்துக் கழித்தால் போதுமானது என்று பிள்ளைகள் அடம்பிடிக்கத் தொடங்கி விட்டார்கள். வேண்டாம் டிஸ்னி வேல்ட் என்கின்ற நிலைமை.

விமான நிறுவனங்கள் சுமார் 80,000 பேரின் வேலைவாய்ப்புக்களை குறைக்கத் தயாராகிவிட்டன. சிறிய நிறுவனங்கள் முற்றிலுமே இயங்க முடியாத முட்டுக்கட்டை நிலை ஏற்பட்டுவிட்டது. உல்லாசப் பயணத்துறை வீழ்ச்சி கண்டுவிட்டது. தற்போது உலகில் அதி உயரத்தில் அமைந்துள்ளதான அமெரிக்காவின் சிக்காக்கோ நகரின் 95ஆவது மாடியொன்றில் உள்ள பிரசித்திபெற்ற ஹோட்டலொன்று வருவாயில்லாமல் தவிக்கிறதாம். அந்த உயரத்தில் அமெரிக்காவில் எவர்தான் துணிந்து ஏறப்போகிறார்கள்? போயிங் விமான உற்பத்தி நிறுவனமே தனது பணியாளர்களில் 30,000 பேரைக் கைவிட வேண்டிய நிலைமை.

உலகின உயர்ந்த கட்டடங்களுககெல்லாம் மவுசு குறைந்துவிட்டது. போட்டி போட்டுக்கொண்டு ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் வானளாவ எழுந்த கட்டடங்களில் காலடி வைக்கும்போது நடுக்கம் எடுக்கின்றது. பங்கர்களில் வாழவேண்டிய நிலைக்கு வானளாவ உயர்ந்து நின்ற நாடுகள் தள்ளப்படுகின்றன.

ஆனால் அதேவேளை உலகெங்கும் புதிய உற்பத்திகளுக்கு மவுசு அதிகரித்து வருகின்றது. அத்துறைகளில் வேலைவாய்ப்பும் அதிகரிக்கப் போகின்றது. பாதுகாப்பைத் தீவிரப்படுத்தும சாதனங்கள் வெடிகுண்டுகளையும் ஆயுதங்களையும் கண்டுபிடிக்கும் கருவிகள் தீயணைப்பு மற்றும் அவசரகால உதவிகளுக்கான சாதனங்கள் என்பவற்றுக்கான கிராக்கி அதிகரித்துவிட்டது. புலனாய்வுத் துறையினருக்கான சுவடு பிடிக்கும் சாதனங்கள் பெருமளவில் உற்பத்தியாகப் போகின்றன.

அடையாள அட்டைகள் கைரேகையைக் கண்டுபிடிக்கும் அல்லது பதிவுசெய்யும் ஸ்கானர்கள் போன்றவற்றுக்கு வேலை இனி அதிகம்தான்.



விசேட ஆடைகள் அவசரத் தேவை

அதேபோல வாயுமுகமூடிகள், விசேட ஆடைகள், ஹெல்மெட்டுகள் எல்லாம் வெகுவாக விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன. குண்டுவெடிப்பைத் தொடர்ந்து தப்பிப்பிழைத்து மனநிறைவில் மறுவாரம் இயங்கத் தொடங்கிய அலுவலகங்களுக்கு வந்த அலுவலர்கள் ஒவ்வொருவரிடமும் பொலீஸார் அடையாளத்தை நிரூபிக்கும் படி கோரியது பலரைத் தர்மசங்கடத்தில் ஆழ்த்தியது. கௌரவப் பிரச்சினை எழுந்தது.

அமெரிக்க விமானங்களில் பயணிகளுக்கு இடையிடையே சிவிலியன்களைப் போல மாறுவேடத்தில் பெருமளவு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அமரப் போகிறார்கள். மீட்புப் பணியாளர்கள் இராணுவச் சேவைகள் போன்ற துறைகளை நோக்கி



வெறுக்கவைக்கும் அடையாளப் பரிசோதனை, விசாரணைகளில் பொலீஸார்

வேலை தேடுபவர்கள் நகரப்போகிறார்கள்.

பயணிகள் விமானங்கள் இனிப் பறக்கும் கோட்டைகளாக மாறப் போகின்றன. அவற்றின் உடல் குண்டு துளைக்காத தடித்த கவசத்தினால் உருவாகப்போகின்றது. பயணிகளின் பொதிகளுக்கான அறைச்சுவா குண்டுவெடிப்பைத் தாங்கும் வகையில் திடமாக அமையப்போகிறது. இரட்டைக் கதவுடைய விமானி அறைக் கதவுகள் இனிக் கணனியில பதியப்பட்டிருக்கும். தெரிந்த முகங்களுக்கு மட்டுமே திறந்துகொள்ளும். எனவே கடத்தல்காரர்கள் உள் நுழைய இயலாது.

விமானத்தின் கட்டுப்பாடுகள் பெரும்பாலும் இனித் தரையில்தான் இருக்கும். தரையில் இருக்கும் கட்டுப்பாட்டு அறையைக் கைப்பற்றினால் அன்றி விமானத்தைத் திசை திருப்ப இயலாது. இப்படியான பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை நடைமுறைப்படுத்த பல ஆண்டுகள் செல்லும்.

கட்டடங்களில் பொருத்தப்படாது கையில் எடுத்துச் செல்லத்தக்க கணனிகள், செல்லிடத் தொலைபேசிகள் என்பவற்றுக்கான தேவையும் இனி அதிகம்தான். வாழ்க்கையில் எதுவும் நிரந்தரம் இல்லை என உணரும் அமெரிக்கர்கள் கொண்டோட வசதியான சாதனங்களைத் தேடுகிறார்கள். நிரந்தரமாக வைத்துப் பாவிக்காமல் பயன்படுத்திவிட்டு சுழற்றி வீசும் உற்பத்திகளுக்கான மவுசும் அதிகரிக்கப்போகின்றது.

**மு. சிவநேசன்**

யுத்தம் வெடித்துவிட்டதால் ஆயுத உற்பத்தித் துறையிலும் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துவருகின்றன. எனவே பங்குச்சந்தை வீழ்ச்சி மளமளவென இறங்கினாலும் சில துறைகளைப் பொறுத்தவரை பங்கு விலைகள அதிகரிக்கத்தான் செய்கின்றன. இனியெல்லாம் புறநகர்ப் பகுதிகளிலும், கிராமங்களிலும் கட்டடங்களுககு கிராக்கி ஏற்படலாம். பெரிய நகரங்களை நோக்கி பெரும் எண்ணிக்கையில் படையெடுக்க மக்கள் அஞ்சக்கூடும்.

பாதுகாப்புக் கெடுபிடிகளால் பொருள்களின் நகர்வு தாமதப்படப் போகின்றது. இதனால் சர்வதேச வர்த்தகம் வேகமாக நடைபெறமுடியாத நிலைமை. வீதிகளில் மெதுவாக நகரும் வாகன வரிசை நீளப் போகின்றது. தலைமையகத்தையே தக்கவைத்துக்கொள்ளப் போராடும் அமெரிக்கக் கம்பனிகளின் வெளிநாட்டுக் கிளைகள் திணறத்தான்போகின்றன.

எனவே நிறுவனங்கள் தமது அதிகாரங்களை அந்தந்தக் கிளைகளிடமே விட்டுவிட்டால் பரவாயில்லை என்று நினைக்கின்ற நேரமிது. தலைமையகக் கட்டுப்பாடுகள் இனித் தாக்குப்பிடிக்காது.

அமெரிக்கர்கள் நாளாந்த வாழ்க்கையில் நிம்மதி இழந்து தவிக்கிறார்கள். தாக்குதலின் தாக்கம் வரவர அதிகரித்தே செல்கிறது. மூன்று அரேபியர்கள் ஏறிக்கொண்ட விமானமொன்றில் பயணம்செய்ய அவர்கள் மறுத்துவிட்டார்கள். கடைசியில் அரேபியர்கள் மூவரும் இறக்கப்பட்ட பின்னரே விமானம் புறப்பட்டு இருக்கிறது. அமெரிக்காவில் பிறந்து வளர்ந்து அதுவே தம் தாய்நாடு என்று கொண்டாடுபவர்கள்கூட தமது நிறம், பெயர், மதம் என்பவற்றினால தற்போது அன்னியப்படுத்தப்படுகிறார்கள். அவர்கள் என்ன பாவம் செய்தார்களோ? சோதனைகளின்போது இவர்கள் கேள்விகளால் துளைக்கப்படுகிறார்கள். நாடுகளின் எல்லைகளையும், விமான நிலையங்களையும் முன்பெல்லாம்போல சுதந்திரமாக அணுக இவர்களால் இயலவில்லை.

பல்கலைக்கழக மாணவர்கள் வாதப் பிரதிவாதங்களில் இறங்கி இருக்கிறார்கள். அசல் அமெரிக்கர்களே அரசை விமர்சிக்கும் அளவுக்கும் நிலைமை வந்துவிட்டது. அமெரிக்கா ஏன் உலக விவகாரங்களில் மூக்கை நுழைக்கிறது? இஸ்ரேலை ஏன் ஆதரிக்கிறது? ஏன் முஸ்லிம்களை அவர்களின் இடத்திலிருந்து விரட்டுகிறது? தன்பாட்டில் இருந்திருந்தால் இந்தத் தொல்லைகள் வந்திருக்குமா என்றெல்லாம் கேள்விகள் எழுகின்றன. உண்மை நிலைவரம் உள்நாட்டிலும் உறைக்க ஆரம்



மும்முரமான ஆயுத உற்பத்தி - ஏவுகணைத் தொழிற்சாலை

பிக்கிறது.

நியூயோர்க் நகரில் வாழும் பிரபல இசைக்குயில் றச்செல் நியூமன் தனது அதிர்ச்சியை வெளியிட்டு இருக்கிறார். தான் பாத்ரூமிலிருந்து வெளிப்பட்டு யன்னல் வழியாக வெளியே பார்த்தபோது விமானமொன்று கோபுரத்தை மோதுவதைக் கண்டதாகத் தெரிவித்து இருக்கிறார். அக்காட்சி அவரை உறைய வைத்திருக்கிறது. அதற்கிடையில் அவரது கண்முன்னே இரண்டாவது விமானமும் கோபுரத்தை மோதி இருக்கிறது. இவர்கள் சொல்லும் கதைகள் நெஞ்சை உறையவைக்கின்றன. எனினும் ஆப்கானில் ஆயிரக்கணக்கானோர் வீடிழந்து, உறவுகளை இழந்து அமெரிக்க விமானங்களுக்கு ஒதுங்கி ஓடும் அல்லல்



நியூயோர்க்கில் நுழையத் தவங்கிடக்கும் டிறக் வரிசை

வாழ்க்கைபற்றி நெஞ்சை உறைய வைக்கும் தகவல்கள் பத்திரிகைகளில் தென்படுவது குறைவாகவே உள்ளது கவலைக்குரியது.

அமெரிக்காவில் மக்களிடையே ஏற்பட்டுள்ள மனப்பிராந்தி பற்றிய ஆய்வுகள் பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்களது மனநிலை பாதிக்கப்படுவதுபற்றி பலரும் கவலைப்படுகிறார்கள். அப்பாவி ஆப்கானியர்களின் மனநிலை விமானத் தாக்குதல்களால் சிதைவடைவதையிட்டு ஆய்வுகள் நடத்த எவரும் இல்லைப்போல் தெரிகிறது.

## அகிலத்தை உலுக்கிவிட்ட அமெரிக்கா மீதான தாக்குதலும் அதன் தொடர் நிகழ்வுகளும்


ஆப்கான் மீதான தாக்குதலை நியாயப்படுத்துவதுபோல பல கண்ணீர்க் கதைகள் நியூயோர்க் நகரிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன. சாவு என்கின்ற அச்சம் அமெரிக்கர்கள் என்றாலென்ன, ஆப்கானியர்கள் என்றாலென்ன ஒன்றுதான். எனக்கு வந்தால்தான் சாவு. அடுத்தவன் ஆடு, மாடுகள் போல மடியலாம என எதிர்பார்ப்பதுதான் தவறு. ஆப்கானில் குடும்பங் குடும்பமாக மக்கள் கொல்லப்பட்டுவிட்டார்கள். பல உறவுகளை இழந்து தப்பிப் பிழைத்திருக்கும் ஒன்றிரண்டுபேரின் சோகம் சொல்லிமாளாது. அகதிகளாக பாகிஸ்தானுக்குள் இழப்புக்களை நெஞ்சில் சுமந்தபடி நுழையும் மக்களின் நிலைமை மிகப் பரிதாபம்.



கடுமையான வாகனச் சோதனைகள்

உலகவர்த்தக நிலையம் தாக்கப்பட்டதும் முதலில் தகவலைப் பெற்று களத்தில் இறங்கிய தீயணைப்பு படை இயந்திர இலக்கம் 4 ஏணி இலக்கம் 15 (**Engine No. 4, Ladder No. 15**)இனைச் சேர்ந்த வீரர்கள் உடனடியாக கோபுரத்தின் படிக்கட்டுகளிலே நூற்றுக்கணக்கான மாடிகளுக்கு ஓடியோடி ஏறிக்கொண்டிருந்தனர். அடிக்கடி அவர்களது தொலைபேசிகள், தொடர்புசாதனங்கள் அலுவலகத்துக்கு தகவல்களை அனுப்பிக்கொண்டிருந்தன.

அவ்வீரர்களில் ஒருவன் ஸ்கொட் லாசன். அவன் கீழ்த் தளத்தை நோக்கி வந்துகொண்டிருக்கையிலே கட்டடம் கொட்டுப்பட்டுப்போகிறது. அவனைப்போல அதே நிறுவனத்தின் 42 வீரர்களைக் காணவில்லை. நிறைமாதக் கர்ப்பிணியான லாசனின மனைவி அவனைக் காணாது கலங்கிக் கலங்கி இரண்டாம் நாள் அவனது மகனைப் பெற்றெடுத்தாள். காணாமற்போன வீரர்களின் பட்டியலில் லாசனின் பெயரைக் கேள்விப்



கலக்கத்துடன் நிமிர்ந்து நிற்கும் உலகின் அதியுயர் கட்டடம் - மலேசியாவின் Petronas Tower

பட்டதும் அவள் துவண்டுபோனாள். இப்படி ஆயிரமாயிரம் அமெரிக்கக் கதைகள் வெளிவரத்தான் போகின்றன.

நியூயோர்க் அலுவலகமொன்றில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் தனது யன்னலுக்கு எதிரே எப்பொழுதும் நிமிர்ந்து நின்ற கோபுரங்களைக்



இனிமேல் காணக்கிடைக்காத காட்சி WTC

காணவில்லை என்பதால் அத்திசையைப் பார்க்கவே மனமில்லை என்று கலங்கிப்போய் இருக்கிறாராம். இப்படியொரு கட்டடத்தை இனி இப்போதைக்குக் கட்டியெழுப்பி பழைய தோற்றத்தைக் கொடுப்பது சாத்தியமும் ஆகாது பாதுகாப்பும் ஆகிவிடாது.

(முடிவும்)

# மேட்டு நிலப் பயிர்ச் செய்கையில் நத்தைகளின் தாக்கம் அதிகரிப்பு

## கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.குடாநாட்டில் தற்பொழுது பெய்துவரும் பருவ மழையும், நிலவுகின்ற காலநிலையும் நத்தைகளின் பெருக்கத்தை அதிகரிக்கின்றன. இதனால் அவற்றின் தாக்கம் நாற்றுமேடைகளிலும், மேட்டுநிலப் பயிர்களிலும் பரவலாக அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு யாழ்மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை அறிவுறுத்தியுள்ளார்.

நத்தையின் தாக்கம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நத்தைகள் மேடையில் உள்ள நாற்றுக்களையும், வளர்ந்த பயிர்களின் இலைகளையும் வெட்டி உண்கின்றன. தாக்கம் அதிகரிக்கும்போது பயிர்ச் சேதமும் அதிகமாகும். இவைகள் இரவில் நடமாடுவதனால் இவற்றை அழிப்பது சற்றுச் சிரமமாக உள்ளது. இருப்பினும் கீழ்க்காணும் முறைகளை ஒருமித்துக் கையாள்வதானால் நத்தைத் தாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

☆ நத்தைகள் பயிர் மீதிகள், கற்குவியல்கள் போன்ற மறைவிடங்களில் பகல் நேரங்களில் தங்கி, அங்கே இனப்பெருக்கமடைவதனால் தோட்டங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியமாகும்.

☆ தோட்டத்தைச் சுற்றி 3-6 அங்குல அகலத்திற்கு உமி பரவி விடுவதனால் நத்தைகள் வெளியில் இருந்து தோட்டத்தினுள் புகுவதைத் தடைசெய்யமுடியும்.

☆ மாலை 6.00 மணிக்குப் பின்பாகவும், இரவு வேளைகளிலும் நத்தைகளைக் கையால் பொறுக்கி உப்பு நீரினுள் இட்டு கொன்று விடவும். பின்பு அவற்றை ஆழமான கிடங்கினுள் புதைக்கவும்.

☆ தோட்டங்களைச் சுற்றி 6அங்குல அகலம், 6அங்குல ஆழமுள்ள அகழியை வெட்டிவிடுவதனால், நத்தைகள் இரவு நேரங்களில் நடமாடும் போது இப்பொறிக் கிடங்குகளில் விழுந்து விடும். பின்னர் காலையில் அவற்றைச் சேகரித்து அழித்து விடமுடியும்.

☆ வெங்காயப் பயிரை, தோட்டத்தைச் சுற்றிக் கரையோரமாகப் பயிர் செய்வதினால் நத்தைகள் தோட்டத்தினுள் செல்வதைத் தடைசெய்ய முடியும். இப்பயிர் நத்தைகளுக்கு வெறுப்பூட்டியாகவுள்ளது.

- இவ்வாறு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார். (க-10)

## சட்டவிரோத மின் இணைப்புகளால்

# வலி.தெற்கில் மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடையும் நிலை!

புன்னாலைக்கட்டுவன்,டிசெ.18

சட்டவிரோத மின்பாவனை அதிகரித்திருப்பதை அடுத்து வலி. தெற்கில் உள்ள மின்மாற்றிகள் அடிக்கடி பழுதடைவதாக சுன்னாகம் மின்சார சபை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

சட்டவிரோத மின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிஸாரின் உதவி பெறப்பட்ட போதிலும், ஊரடங்குச் சட்டத்தைச் சாதகமாக்கிக் கொள்ளும் சிலர் சட்டவிரோத மின் பாவனையைப் பெற்று வருகின்றனர் என்றும் -

இவ்வாறு சட்டவிரோத மின்சாரத்தைப் பெறுவதற்காக ஏற்படுத்தப்படும் இணைப்புக்களாலேயே மின் மாற்றிகள் பழுதடைவதாகவும் -

அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (க-7-133)


*வணிகப் பிரமுகர்களே!*

**மேலும் மேலும் உங்கள் பெயர், விலாசங்களை 2002ஆம் ஆண்டுக்கான கலண்டர் மூலம் ஊர்ஜிதம் செய்யுங்கள்.**

**எங்களிடம் நம்.1 வகைவகையான வண்ண வண்ண றோல் கலண்டர்களும் மற்றும் அழகிய மனேஜ்மன்ற் டயறிகளும் டெஸ்க் டயறிகளும் விற்பனைக்கு வந்துவிட்டன. கலண்டர்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:**

**சிவா நறுமணப் பூங்கா**

288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.
T.P. - 021-2567

*குறிப்பு:-*
மொத்தமாகக் கொள்முதல் செய்வோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
எங்கள் காட்சியறையில் வந்து பாருங்கள்!
வண்ண வண்ண அழகிய கலண்டர் வகைகளை!! (96034)


# ஈவினை, குப்பிளான் பகுதிகளில் உருளைக்கிழங்கு இரவில் அபகரிப்பு!

## விவசாயிகள் கண்விழித்து காவல்!!

புன்னாலைக்கட்டுவன்,டிசெ.18

யாழ்குடாநாட்டில் உள்ள பொதுச் சந்தைகளில் உருளைக்கிழங்கின் விலை அதிகரித்திருப்பதையடுத்து -

புன்னாலைக்கட்டுவன், ஈவினை, குப்பிளான் போன்ற பகுதிகளில் உள்ள தோட்டங்களில் நடப்பட்ட விதை உருளைக்கிழங்குகள் இரவு வேளைகளில் இனந்தெரியாதோரால் தோண்டி எடுக்கப்படுகின்றன.

இதனால் பெரும் சிரமங்களின் மத்தியில் தோட்டங்களில் இரவுக் காவலில் ஈடுபடவேண்டிய நிலை சம்பந்தப்பட்ட பகுதி உருளைக்கிழங்குச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டத்தின் மத்தியிலும், கொட்டும் பனியில் விவசாயிகள் இவ்வாறு இரவில் கண்விழித்து காவலில் ஈடுபட்டுள்ளனர் என எமது பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்குடாநாட்டில் உள்ள பொதுச் சந்தைகளில் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 130 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்படுவது தெரிந்ததே. (ம-7-133)

## கோப்பாய், பூதர்மடப் பகுதியில்

# கால்நடை வைத்திய அதிகாரி பணிமனை புதிய கட்டடம் அமைக்கக் காணி

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான அரச காணி ஒன்றைக் கோப்பாய் பூதர்மடப்பகுதியில் வழங்க கோப்பாய் பிரதேச செயலர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தினால் கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பணிமனைக்கு புதிய கட்டடம் அமைக்கவென நிதி ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும்-கட்டடம் நிறுவுவதற்கான நிலம் கிடைத்தவுடன் வேலைகள் ஆரம்பிக்கப்படும் எனவும்-கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (க-180)

## விடுமுறையில் வீடுகளுக்குச் செல்லும்

# படையினர் விரும்பி வாங்கும் பனம் உற்பத்திப் பொருள்கள்!

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.குடாநாட்டில் இருந்து விடுமுறையில் தென்பகுதிக்குச் செல்லும் படையினர் பனம்பொருள் உற்பத்திகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.

பனங்கட்டி, ஒடியல், தொப்பி, பனைநாரில் செய்யப்பட்ட பை, பணாட்டு என்பனவே இவ்வாறு அதிகமாகக் கொள்வனவு செய்யப்படும் பனம் பொருள் உற்பத்திகளாகும்.

மேற்படி உற்பத்திப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்காக யாழ். மத்திய சந்தைப் பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் படையினர் எந்தநேரமும் குழுமி நிற்பதைக் காண முடிகிறது.

இதேவேளை -

பனம் உற்பத்திப் பொருள்களுக்கான விற்பனை அதிகரிப்பதை அடுத்து நெடுந்தீவு, அனலைதீவு உட்பட தீவுப்பகுதிகளில் இருந்தும் வலிகாமத்தின் சில பகுதிகளிலும் இருந்தும் நாள்தோறும் யாழ்.மத்திய சந்தைக்கு பனம் உற்பத்திப் பொருள்கள் கொண்டுவரப்படுவதையும் அவதானிக்கமுடிகிறது. (க-7-133)

### பாலர் பாடசாலை மாணவருக்கு இலவச சீருடை, சப்பாத்து

நவாலி,டிசெ.18

சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தங்கள் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலை மாணவ, மாணவியருக்கு இலவசமாகச் சீருடை, சப்பாத்து, சத்துணவு என்பவற்றை எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் வைத்து வழங்கவுள்ளனர். (க-100)

### ஒளி விழா

நவாலி,டிசெ.18

சண்டிலிப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கம் நடத்தும் ஒளிவிழா நாளை புதன் காலை 9.30 மணி முதல் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

(க-100)

### அகதி முகாம் மக்களுக்கு உடுபுடைவைகள்


தென்மராட்சி,டிசெ.18

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு கடந்த சனிக்கிழமை உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

பிரதேச சபைத் தலைவர் த.யோகராசா, ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் ப.இரவீந்திரன் (ராசிக்) ஆகியோர் முகாம்களுக்கு நேரடியாகச் சென்று உடுபுடைவைகளை வழங்கினர்.

(க-117)


**இரண்டாவது வருட நினைவஞ்சலி**



மலர்வு 04 - 02 - 1941

உதிர்வு 12 - 12 - 1999

**அமரர் இராமு குணலிங்கம்**

திதி: 18-12-2001

எங்களது அன்புத் தெய்வமே!
எம்மை விட்டு நீர் சென்று
ஆண்டுகள் இரண்டு ஆனதையா!
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவில் நாம் வாழ்வோம்!

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உரும்பிராய் மேற்கு,*
*உரும்பிராய்.* (96032)



# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கோண்டாவில் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**



எமது சங்கத்தின் அங்கத்தவர்களின் தொழில் முயற்சியை மேம்படுத்தும் பொருட்டு
அங்கத்தவர்களுக்கு ரூபா 9,00,000/- வழங்கி
ஊக்கப்படுத்தியமைக்காக
எமது மதிப்புக்குரிய முன்னாள் அமைச்சரும்
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின்
செயலாளர் நாயகமுமான

**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

அவர்களையும் -



இந்நிதியினைப் பெற்றுத்தர உதவிய
நல்லூர் பிரதேச சபைத் தலைவர்

**திரு.க.மணிபல்லவராஜன்**

[நிஷாந்தன்]
அவர்களையும் -

நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அங்கத்தவர்கள்,
இயக்குநர் சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.

*கோண்டாவில்.* (96037)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1936 - 07 - 19

விண்ணில் 2000 - 12 - 29

**திருமதி முருகேசு செல்லம்மா**

திதி:- 18-12-2001

அன்பாலும் பாசத்தாலும் அரவணைத்த அம்மா!
உங்கள் பிரிவால் என்றும் வாடுகின்றோம்.
ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்டீர்களே!
உங்கள் நினைவு என்றும் எம்மை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*சி.சிவசந்திரராசா (கந்தசாமி)*
*கைதடி மேற்கு, கைதடி.*

(96030)

உ

# ஒலிப்பதிவு நாடா



தேவார இசைமணி, அருளிசையரசு,
கலைஞான கேசரி தாவடியூர்

**கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன்**

அவர்களது

☆ தேவாரப் பண்ணிசை
☆ திருப்பள்ளியெழுச்சி
☆ திருவெம்பாவை ஆகியன **CD**, ஓடியோக் கஸட்களில் பதிவு செய்யப்பட்டு இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

**இவற்றை விருப்பம் போல் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய இடங்கள்:**

*கவிஞர் இ.குகதாசன்,*
*"ஸ்ரீ திருப்பதி"*
*357, 591 கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*(நாவலர் பாடசாலைக்கு அருகில்)*

மு.க.திருலோகநாதன்,
ஸ்ரீசக்தி விற்பனை நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரத்துச் சந்திக்கு அருகில்)
தொலைபேசி. 2523. (95983)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 19 - 08 - 1943

உதிர்வு 29 - 12 - 2000

## அமரர் குமரேசு சதாசிவம்

திதி:- பூர்வபக்க சதுர்த்தி

ஆண்டொன்று சென்றது அப்பாவே!
ஆறவில்லை எம் துயரம் அப்பாவே! எம்மை
நல்லோராய் ஆக்குவதற்குப் பாடுபட்டீர்!
நல்லது காணுமுன் ஓடி மறைந்தீரோ?
தெய்வமாய் நின்று எம்மைக் காத்திடுவீர்!

*புதுவளவு,*
*தும்பளை மேற்கு,*
*பருத்தித்துறை.* (95969)

உங்கள் நினைவால் வாடும்:
- மனைவி, மக்கள்.

# கிழக்கில் புலிகள் பகுதிக்கு லொறிகள் செல்லத்தடை!

மட்டக்களப்பு,டிசெ.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கு உழவு இயந்திரங்கள், லொறிகள் செல்வதற்கு படையினர் தடைவிதித்துள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக படையினர் இந்தத் தடையை நடைமுறைப்படுத்தியுள்ளனர்.

செங்கல், மணல் போன்றவற்றை எடுத்துவருவதற்காகவே லொறிகள், உழவு இயந்திரங்கள் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் செல்வது வழக்கமாகும்.

படையினர் விதித்துள்ள தடையால் இந்தப் பொருள்கள் எடுத்துவரப்படாததால் கட்டடப் பணிகள் பாதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்று சுட்டிக்காட்டப் பட்டது.

(ஐ-3-21)

## 'அமைச்சு அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்படமாட்டார்கள்'

கொழும்பு,டிசெ.18

அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியவற்றில் முக்கிய பதவிகளை வகிப்போரை பதவி நீக்கம் செய்வதில்லை என்று பிரதமர் ரணில் தலைமையிலான அரசு முடிவுசெய்துள்ளது.

பிரச்சினைக்குரிய சிலரை மட்டும் மாற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## யாழ்.சந்தையில் பாவனைக்கு உதவாத பழங்கள் அழிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்ப்பாணம் பொதுச் சந்தையில் மனித பாவனைக்கு ஒவ்வாத பழவகைகள் விற்பனை செய்யப்பட்டமை பொதுச் சுகாதாரப் பகுதியினரால் திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டு, அவை அழிக்கப்பட்ட சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

தோடை, அப்பிள் போன்ற 150 இற்கும் மேற்பட்ட பழங்கள் பரிசோதனையின் போது ஒரு கடையில் மட்டும் அழிக்கப்பட்டன.

பொதுச் சுகாதாரப் பகுதியினர் வியாபாரிகளைக் கடுமையாக எச்சரித்ததுடன் இனியும் இவ்வாறான பாவனைக்கு உதவாத பழங்கள் மற்றும் பண்டங்கள் விற்பனை செய்யப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவுறுத்தினர்.

(க-180)

## வீதிகள் புனரமைப்பு

வலி.கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட உரும்பிராய் வாகையடி வீதியும், புத்தூர் எல்லாளன் வீதியும் 3லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. வலிகாமம் கிழக்கு பிரதேச சபை நிதி மூலம் இந்த இரண்டு வீதிகளும் புனரமைக்கப்பட்டு வருவதாக பிரதேச சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(க-180)

# சேவை நலன் பாராட்டு விழா



கைதடி மத்தி கிராம அலுவலராகக் கடமையாற்றி 09.11.2001இல் ஓய்வுபெற்றுள்ள

## திரு.பெரியதம்பி செல்லையா

அவர்களின் அளப்பரிய சேவையைக் கௌரவித்து இன்று (18.12.2001) செவ்வாய்க்கிழமை குமரநகர் சனசமூக நிலைய மைதானத்தில் திரு.சுப்பிரமணியம் செல்வராசா (கிராம அலுவலர்) தலைமையில் பாராட்டு விழா நடைபெறும்.

இவ்விழாவிற்குத் தென்மராட்சி பிரதேச செயலர் - திருமிகு பு.சுந்தரம்பிள்ளை அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*விழா அமைப்பு*

குமரநகர் வாழ் மக்களின் அனுசரணையுடன்
(95980) கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 13 - 04 - 1971

மறைவு 29 - 12 - 2000

## அமரர் தங்கராசா தவனேஸ்வரன்

எங்கள் அன்பின் ஒளி விளக்காய்
பாசத்தின் உறைவிடமாய்த் திகழ்ந்து
எங்களை வழிநடத்திய செம்மலே!
ஆண்டு ஒன்று சென்றாலும் - உந்தன்
நினைவுகள் அழிவதில்லை!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*குரும்பைகட்டி,*
*புலோலி.* (96016)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


*போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர் யுவதிகளுக்காக*

**TRRO** நிறுவனம் அறிமுகப்படுத்தும்




# பிரவாகம்

## இலவச கணனிப் பயிற்சித் திட்டம்

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

TRRO நிறுவனம் அறிமுகப்படுத்தும் **பிரவாகம்** கணனி அறிவு மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்புபவர்கள் 02.01.2002 ஆம் திகதிக்கு முன் எமது நிறுவனத்துடன் தொடர்புகொண்டு விவரங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் பெற்று விண்ணப்பிக்கவும்.

**பயிற்சி நெறிகள் விவரம்:**

Ms Word
Ms Excel
Ms Access
Ms Power point
Page Maker
Corel Draw
Visual Basic

**பயிற்சி நெறிகளுக்கு பயிற்சிக்கட்டணம் அறவிடப்படமாட்டாது**

பயிற்சி நெறிகள் நடைபெறும் இடங்கள்:-

1. மருதனார்மடம் சந்தி, மருதனார்மடம்.
2. 106, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

**ஆரம்பம் 02-01-2002**

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

Chairman,
TRRO Computer Training Centre,
106, 4th Cross Street, Jaffna.

(C/19757)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 07 - 05 - 1951

அமலன் பாதத்தில் 29 - 12 - 2000

## அமரர் சுந்திரவேலு விஜயரட்ணம்

*திதி - பூர்வபக்க சதுர்த்தி*

ஆண்டு ஒன்று போனாலும் உங்கள் பிரிவு ஆறாது!
அன்னையவள் எம்மை வளர்க்க தனியாய்த் துடிக்கின்றாள்
அப்பா நாம் இருவரும் ஆருக்கு உரைப்போம்?
அன்புதனைப் பொழிந்தீர்கள் அரவணைக்க நீங்கள் இல்லை!
இன்னொருகால் ஜென்மம் எடுத்து வந்து எங்களது
இதயம் மகிழ்வெய்த வாருமப்பா!

*"விதுலகம்"*
*டச் றோட்,*
*மானிப்பாய்.*

என்றும் உங்கள்
நினைவில் வாடும்:
(95803) தாய், மனைவி, பிள்ளைகள்.

## உதயன்

### முதல் தடவையும் இறுதிச் சந்தர்ப்பமும்

☆ இனப்பிரச்சினைக்குப் போரினூடாகத் தீர்வுகாணப்போவதாகக் கூறிய பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய போன்ற கட்சிகளால் இந்தத் தேர்தலில் பெரிய வெற்றி எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் புலிகளுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதான குற்றச்சாட்டுக்கு இலக்காகிய ஐக்கிய தேசியக் கட்சி பெரு வெற்றியீட்டியிருக்கின்றது.

☆ சிங்கள மக்கள் 'போர் வேண்டாம் சமாதானமே தேவை' என்ற தொனியில் தமது தீர்ப்பை வழங்க, தமிழ்ப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களோ வடக்கு - கிழக்கு என்ற பேதமின்றி எங்களுக்கு அடிப்படையான - உடனடியாகத் தீர்க்கவேண்டிய - அரசியல் பிரச்சினை உண்டு என்று தமது தெரிவினூடாக வெளிப்படுத்தியுள்ளனர்.

☆ நாடாளுமன்ற ஜனநாயகத்தைப் பயன்படுத்தி இந்த இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை உருவாக்கிக்கொள்வதற்கான ஒரு கடைசிச் சந்தர்ப்பத்தை மக்கள் கொடுத்திருக்கின்றார்கள். இதுவே அதற்கான கடைசிச் சந்தர்ப்பமாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

- சமூக சிரத்தை மற்றும் கவனிப்புக்குரிய விடயங்கள் பற்றிய கற்கை வட்டமான 'சமூகப் பரிமாணங்கள்' என்ற அமைப்பு மேற்கொண்ட பொதுத் தேர்தல் பற்றிய ஆய்வின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி, பி.சிவகுமார், மேவின் மகேசன் ஆகியோர் இந்த ஆய்வு அறிக்கையைத் தயாரித்திருக்கின்றார்கள்.

வடக்கு - கிழக்கில் ஏறத்தாழ அனைத்து மாவட்டங்களிலும் (அம்பாறை மாவட்டத்தில் சற்று வேறுபட்டு இருந்தபோதும்) நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தின் மூலம் தமது அன்றாட இருப்பியல் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளமுடியும் என்ற பெருமளவிலான எதிர்பார்ப்பு எதுவும் மக்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் -

அதிலும் குறிப்பாகத் தமது தேவைகள் ஏதோவொரு வகையில் நாட்டின் இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்டதாக அமையும் பட்சத்தில், தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவராக இருப்பினும் அவராலும்கூட எதையும் செய்யமுடியாது என்பதை அனுபவவாயிலாக அவர்கள் கண்டிருக்கிறார்கள் என்றும் -

அந்த ஆய்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

சமாதானம் வேண்டும் என்று நிற்கும் சக்திகளுக்கும் சமாதானத்துக்கு எதிரான சக்திகளுக்குமிடையேயான போட்டியாக இத்தேர்தல் அமைகின்றது எனத் தேர்தலுக்கு முன்னரே விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அறிவித்திருந்தார்.

சிங்களத் தலைமையிலான இலங்கை அரசினால் வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதியிலும் நடத்தப்பட்ட ஒரு பொதுத் தேர்தல் குறித்து விடுதலைப் புலிகள் சிரத்தை எடுத்து - அதற்கு முக்கியத்துவம் கொடுத்து - கவனம் செலுத்தி - பகிரங்க அறிவிப்பு விடுத்தது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

தமது மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்கு வேறு வழியின்றி ஆயுதப் போராட்ட வழியை நாடி, பெரும் விடுதலைப் போராட்ட இராணுவ சக்தியாக வளர்ந்துநிற்கும் விடுதலைப் புலிகள், ஜனநாயக வழியிலான தேர்தலின் பக்கமும் கவனத்தைக் காட்டியிருப்பது அமைதித் தீர்வின்பால் அவர்களுக்கு இருக்கும் அக்கறையின் விளைவே.

இந்த அக்கறையைப் புதிதாகப் பதவியேற்றிருக்கும் ஐ.தே.க. கட்சி சரியாகப் பற்றிக்கொண்டு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை - முன்முயற்சிகளை - ஆரம்பிக்கவேண்டும்.

ஜனநாயக வழியிலான தேர்தலின்பால் புலிகள் முதல் தடவையாக அக்கறை காட்டிய இந்தப் பொதுத் தேர்தல், 'சமூகப் பரிமாணங்கள்' அமைப்பு தனது ஆய்வு அறிக்கையில் குறிப்பிட்டதுபோல ஜனநாயக வழியில் இனப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பதற்கான இறுதிச் சந்தர்ப்பத்தையும் தந்துள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திப் பயனடைவது இலங்கை அரசின் நன் முயற்சிகளில்தான் தங்கியுள்ளது.

விரைந்து - ஆக்கபூர்வமாக - நடவடிக்கை எடுக்காமல், இந்த - இறுதிச் சந்தர்ப்பத்தைக் கோட்டைவிட்டால் அதன் விளைவு நாட்டையும் மக்களையும் நிவிர்த்தி செய்யமுடியாத பாதிப்புக்குள் ஆழ்த்திவிடும் என்பதை அரசும் சிங்களத் தலைமையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

---

### ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகிலுள்ள

# இறைச்சிக் கடையை வேறிடத்துக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குக!

## பிரஜைகள் குழு பிரதேச சபைக்குக் கடிதம்

சண்டிலிப்பாய்,டிசெ.18

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் உள்ள இறைச்சிக் கடையை அங்குள்ள ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் நலன்கருதி அங்கிருந்து வேறு இடத்திற்கு இடம்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஆனைகோட்டை பிரஜைகள் குழு, வலி. தென்மேற்கு பிரதேச சபையின் செயலாளரைக் கடித மூலம் கேட்டுள்ளது.

இந்த இறைச்சிக் கடையினால் இப்பகுதிச் சுற்றாடல் சுகாதாரம் மாசுபடுவதாகவும், இரு இந்து ஆலயங்கள் மற்றும் பாடசாலைகள் சமீபத்தில் இருப்பதாகவும், ஆகவே விரைவில் வேறு இடத்திற்கு இந்த இறைச்சிக் கடையை இடம்மாற்றம் செய்வதற்கு ஆவண செய்யப்படவேண்டும் என்றும் இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர், மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(க-135)

### ஈவினைப் பகுதி வீதிகள் பல புனரமைப்பு

புன்னாலைக்கட்டுவன்,டிசெ.18

ஈவினை கற்பக விநாயகர் வீதி, மத்தாளோடை மயான வீதி, மயிலங்காடு தேவாலய வீதி போன்ற வீதிகள் திருத்தப்பட்டுள்ளன.

கடந்த இருபது வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாமல் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த மேற்படி வீதிகள் வலி.தெற்கு பிரதேச சபையின் விசேட நிதியுதவித் திட்டத்தின் கீழ் திருத்தப்பட்டுள்ளன.

இவ்வீதிகள் கற்கள் போடப்பட்டு, தார் ஊற்றி விசாலமாகத் திருத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-133)

---

## நாட்டு நடப்பு

காடாத்திவிட்டோம் நாம்
புறோக்கர் பேசிவந்து
புகைப்படத்தைக் காட்டிவிட
ஓம் என்று நாம் சொல்ல
ஒரு மாதத்தில் மணம்முடிய
ஐந்து இலட்சம் வாங்கியவன்
ஐந்தாம் நாள் புறப்பட்டான்
நாலாண்டு காலமாய்
நாமோ தேடாத இடமில்லை
பவுசரில் பதுங்கி எல்லே
பரிஷுக்குப் போகயிக்கை
மூச்சுத் திணறி எல்லோ
முடிந்தானாம் நடு வழியில்
கல்லுக்குப் பூசைவைத்து
கஸ்தூரி காடாத்தி விட்டாளாம்.

- விகடகவி

---

### 3 கோரிக்கைகள் குறித்து அரச அதிபர் மௌனம்

# செயலகம் முன் திங்கள்முதல் வழிமறிப்புப் போராட்டம்

### பாதுகாவலர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.18

வடபகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக முன் வைக்கப்பட்ட மூன்று கோரிக்கைகளுக்கும் இதுவரை அரச அதிபர் தகுந்த பதில் எதனையும் அளிக்கத் தவறிவிட்டதால் -

எதிர்வரும் 24ஆம் திகதி திங்கட்கிழமைமுதல் தொடர்ச்சியாகச் செயலகத்தை ஸ்தம்பிக்கச் செய்யப்போவதாக வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சங்கத்தின் கலந்துரையாடலில் இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும், அன்னையர் முன்னணியும் இணைந்து - ஐந்து நாள்கள அவகாசத்துடனான கடிதமொன்றைக் கடந்த 12ஆம் திகதி யாழ்.அரச அதிபரிடம் கையளித்திருந்தது.

#### கால அவகாசம்

தற்போது கால அவகாசத்தை நீடித்துள்ள பாதுகாவலர் சங்கம் - தமது கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 23ஆம் திகதிக்குள் பதிலேதும் கிடைக்காதவிடத்து மறுநாள் திங்கட்கிழமை முதல் செயலக முன்றிலில் வழிமறிப்புப் போராட்டம் நடத்தப்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும் எனவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை - பாதுகாவலர் சங்கத்தின் இப்போராட்ட நடவடிக்கைகளுக்குச் சகல தரப்பினரும் - குறிப்பாக அரசசார்பற்ற நிறுவனங்கள், சமயப் பெரியார்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் ஆதரவைச் சங்கம் வேண்டி நிற்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

### வாகனங்களுக்கு தகுதிச் சான்றிதழ்

யாழ். அரசாங்க அதிபரின் அனுமதி பெற்று பற்றீஷன் தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வாகனங்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருவதாக அதன் நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

வாகனங்களின் தரத்தை உறுதிப்படுத்தி, அதற்கான சான்றிதழ்களைத் தாம் வழங்கி வருவதாகவும் - இதற்கென விசேட பரிசோதகர் ஒருவர் உள்ளார் எனவும் - அந்த நிர்வாகி மேலும் தெரிவித்தார்.

கடந்த 1985ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையும் யாழ்.மாவட்டத்தில் தமது நிறுவனம் மட்டுமே இந்த நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் -

வாகனச் சொந்தக்காரர்கள் தமது வாகனங்களின் தரத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் தமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளலாம் எனவும் - மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது . (க-10-8-180)

---

### பரீட்சை நிலையங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

வலிகாமப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்து இயங்கும் தென்மராட்சிப் பாடசாலையின் பரீட்சார்த்திகளுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அவரவர் பிரவேச அட்டையில் வழங்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் சில பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் உரிய மாற்றங்களை அவதானித்து அந்தந்த இடங்களில் சென்று பரீட்சை எழுதும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

☆ இணுவில் மத்திய கல்லூரி மண்டப இல.1 - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

☆ இணுவில் மத்திய கல்லூரி மண்டப இல.2 - மருதனார்மடத்தில் இயங்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் -

☆ நாவற்குழி ம.வி. பரீட்சை மண்டபம் - உரும்பிராய் இந்துக்கல்லூரியிலும் -

☆ கைதடி முத்துக்குமாரசாமி ம.வி. பரீட்சை நிலையம் அதே இடத்திலும் - அமைக்கப்பட்டுள்ளது.

- என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (.5)

### நாளை

மார்கழி 04
புதன்கிழமை
திதி : பஞ்சமி
முழுநாளும்
நட்சத்திரம்: திருவோணம்
மு.ப. 10.22 வரை.
சுபநேரம் : 4.53 - 6.23
ராகுகாலம் : 12.23 - 1.53
(பழைய நேரப்படி)

---

### நாளை பேராதனையில் 'மினி ஒலிம்பிக்'

# யாழ்.பல்கலை மாணவர்களில் பலர் கலந்துகொள்ள முடியாத நிலை!

## நிர்வாகம் நிதி ஒதுக்கத் தவறியதே காரணமாம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

பல்கலைக்கழகங்களுக்கிடையில் மூன்று வருடங்களுக்கு ஒருதடவை நடத்தப்படும் 'மினி ஒலிம்பிக்'கில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் ஒருபகுதியினர் பங்குபற்றமுடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

'மினி ஒலிம்பிக்'கில் பங்குபற்றச் செல்லும் மாணவர்களுக்காகப் போதிய நிதியை ஒதுக்கீடு செய்து கொடுக்க யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம் முன்வராததே இதற்குக் காரணம் என்றும் -

இதனால் திறமைமிக்க பல மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றித் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தமுடியாத நிலைக்கு உட்பட்டுள்ளனர் என்றும் - கூறப்பட்டது.

'மினி ஒலிம்பிக்' போட்டிகள் நாளை புதன்கிழமை பேராதனைப் பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கென நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இன்று விமானம் மூலம் கொழும்புக்குப் புறப்படவிருந்தனர்.

எனினும் அவர்களுக்கான விமானப் போக்குவரத்துக்கான கொடுப்பனவை மட்டுமே வழங்கமுடியும் எனப் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்ததையடுத்து பல மாணவர்கள் தமது பயணத்தைக் கைவிட்டுவிட்டனர்.

இதேவேளை - மேற்படி விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவென சுமார் 55 மாணவர்கள் இன்று விமானம் மூலம் கொழும்பு செல்கின்றனர்.

கடந்த வருடங்களில் 'மினி ஒலிம்பிக்'கில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு விளையாட்டுக்களில் சாதனை படைத்தமை தெரிந்ததே. (ம-7-6-9-100)

### உதயவாக்கு

தகுதியில் லாதவனைப் புகழ்தல் கள்ளச் சந்தையில் ஒருபொருளை விற்பதற்குச் சமம்.

---

## லொறி உரிமையாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ் செயலகத்துக்கான பொருள்களை பருத்தித்துறையில் இருந்து எடுத்துவரும் லொறிகள் எரிபொருளை கல்வியங்காட்டில் அமைந்துள்ள நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தின் எரிபொருள் விற்பனை நிலையத்தில் மட்டுமே நிரப்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தமக்கு ஏற்பட்டுள்ளதாக 'லொறி உரிமையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

செயலகப் பொருள்களை எடுத்து வரும் லொறிகளில் அதிகமான லொறிகள் வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவையாக இருப்பதனால் அவை இங்கு வந்து எரிபொருளை நிரப்ப முடியாத நிலை உள்ளது என்றும் -

அதனால் வடமராட்சிப் பகுதியில் உள்ள ஏதாவது ஒரு விற்பனை நிலையத்தின் மூலம் தங்களுக்கு எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு லொறி உரிமையாளர்கள் தனியார் பாரவூர்தி உரிமையாளர்கள் சங்கத்தைக் கேட்டுள்ளனர்.

இது விடயம் தொடர்பாக யாழ். அரசாங்க அதிபருக்கு மேற்படி சங்கம் அறிவித்துள்ளதுடன் ஆவன செய்யுமாறும் கேட்டுள்ளது (க-10-8-180)

### சிறந்த கிறிஸ்மஸ் குடில்களுக்கு பரிசு!

குருநகர்,டிசெ.18

குருநகரில் உள்ள வீட்டுச் சொந்தக்காரர்களால் அவர்களது வீடுகளில் அமைக்கப்படவுள்ள கிறிஸ்மஸ் குடில்களில் சிறந்த முறையில் குடில்களை அமைக்கும் வீட்டுச் சொந்தக்காரர் மூவருக்குப் பரிசில்கள் உள்ளதாக குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தை அருட்திரு. அ.ஜெயசேகரம் அடிகளார் அறிவித்துள்ளார்.

வீடுகளில் அமைக்கப்படவுள்ள இக் குடில்களைப் பார்வையிட எதிர்வரும் 24ஆம் திகதி ஆலய நிர்வாகத்தினர் வருகை தருவர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-51)

### மேலும் இருவர் கைதாகினர்!

கரவெட்டி அத்துளு அம்மன் கோயில் பகுதியில் கடந்தவாரம் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக மேலும் இருவர் நெல்லியடிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட பருத்தித்துறை மாவட்ட நீதிவான் அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் செய்யுமாறும் பொலீஸாரைப் பணித்துள்ளார். (க-117)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கதிரவேலு நல்லையாவின் விசேட அ.அட்டை (இல.091013980) பண்டத்தரிப்பில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் P.S.B. தொலைத் தொடர்பகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். தொலைபேசி இல.2385. (96018)

யோகம் மில் ஒழுங்கை, தவசிகுளம், மிருசுவில் என்னும் முகவரியுடைய ஸ்ரீபன் செல்வநாயகம் லஜித்தா என்பவருடைய விசேட அடையாள அட்டை முதலாம் குறுககுத் தெருவுக்கும் காங்கேசன்துறை வீதிக்கும் இடையில் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கஸ்தூரியார் வீதியிலுள்ள சியானாஸ் புடைவைக் கடையில் ஒப்படைத்துதவவும் (96042)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள PEUGEOT கார் (6SRI 0120) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr.T.குலசிங்கம், நந்தாவில் லேன், கொக்குவில். (96036)

## நேற்றுமுன்தினம் இரவு

# எரிந்தபடி விழுந்த 'பரா' குண்டால் யாழ்.ஆஸ்பத்திரியில் பரபரப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் நேற்றுமுன்தினம் இரவு 'பரா' வெளிச்சக் குண்டுகள் நான்கு எரிந்தபடி விழுந்ததையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இரவு 9 மணியளவில் தாதியா பயிற்சிப் பாடசாலை அருகே விழுந்து எரிந்த இந்தப் 'பரா' வெளிச்சக் குண்டுகளால் பயிற்சிப் பாடசாலை விடுதியில் இருந்தவர்கள் அச்சமடைந்து அங்கிருந்து வெளியேறி, ஆஸ்பத்திரியில் தஞ்சமடைந்தனர்.

சிறிது நேரத்தில் அந்த 'பரா' வெளிச்சக்குண்டுகள் அணைந்த பின்னர் இரவுக் கடமையில் இருந்த தாதியர் பரிபாலகர், குண்டுகள் எரிந்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டு ஆபத்தேதும் இல்லை எனபதை உறுதிப்படுத்தியதையடுத்து பரபரப்பு அடங்கியது.

அதன்பிறகு விடுதியிலிருந்து வெளியேறிய தாதியர் பயிற்சி மாணவிகள் விடுதிக்குத் திரும்பினர்.

பரபரப்புக்குக் காரணமான 'பரா' வெளிச்சக் குண்டுகள் எங்கிருந்து ஏவப்பட்டன என்பது தெரியவரவில்லை. (ஒ-139)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,டிசெ.18

தெல்லிப்பழை காசிவிநாயகா தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் பெருங்கதைப் படிப்பு பூர்த்தி விழா நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9மணிக்கு பஞ்சமுக விநாயகப்பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனையுடன் நடைபெறும். விழாவின் இறுதியில் விநாயகப்பெருமான் திருவீதி உலாவரும் காட்சி நடைபெறும். (3-15)

★ ★ ★

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

திருவாதிரை உற்சவத்தின தேர்த் திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கும் ஆர்த்திரா அபிஷேகம் மறுநாள் அதிகாலை 2.00 மணிக்கும் தீர்த்தோற்சவம் பிற்பகல் 3.00 மணிக்கும் நடைபெறும்.

திருவிழா பத்து தினங்களும் மாணிக்கவாசகர் மடாலயத்தில் அன்னதான நிகழ்வும் இடம்பெறும் உற்சவகால ஏற்பாடுகள் ஆலய நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (3-73)

★ ★ ★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான விஷு வருஷ வைகுண்ட ஏகாதசி மஹோற்சவம் இன்று காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 10 நாள்கள் இடம்பெறும் இவ்உற்சவத்தில் எதிர்வரும் 26ஆம்திகதி காலை 11.30 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

தீர்த்தம் காலை 10 மணிக்கு திருவடி நிலையில் நடைபெறும்.(3-15)

★ ★ ★

தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலய சதுர்த்தி உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிகு நடைபெறவிருக்கிறது.

அத்துடன் நாளை புதன்கிழமை மாலை 3 மணிக்கு கஜமுக சங்காரமும், நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு இலர்ச்சார்ச்சனையும் இடம்பெறவிருக்கின்றன. (3-4)

★ ★ ★

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் தினமும் அதிகாலை 5.30 மணிக்கு மார்கழி மாதத் திருப்பாவைப் பூசையும் அதனைத் தொடர்ந்து பஜனை வீதி வலமும் இடம்பெற்று வருகின்றன. (ஒ-3)

## கலந்துரையாடல்

வலி.வடக்கு,டிசெ.18

வலி மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக கழகங்களிடையேயான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அடுத்த ஆண்டுக்கான விளையாட்டுப்போட்டி மற்றும் விளையாட்டு அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளமையால் சகல விளையாட்டுக் கழக பிரதிநிதிகளையும் தவறாது கலநதுகொள்ளும்படி விளையாட்டு உத்தியோகத்தர் செல்வி க.சந்திரமதி கேட்டுள்ளார். (3-86)

## ஒளிவிழா

வலி.வடக்கு,டிசெ.18

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய அதிபர் மா.நாகேந்திரசீலன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (3-86)

## உதைபந்தாட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டகிளை ஆசிரியர்களுக்கிடையில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலையும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையும் மோதவிருக்கின்றன. (-3)

---

உ

ஸ்ரீராமஜெயம்

**பொன்னாலை**

**திருவருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான**

**வைகுண்ட ஏகாதசி**

**மஹோற்சவ விஞ்ஞாபனம்**

*கண்ணன் அடியார்களே!*

இன்று (18-12-2001) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறும்.

26-12-2001 புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு **தேர்த்திருவிழா**

காலை 7 மணிக்கு **சுவர்க்கவாயில் தரிசனம்**

27-12-2001 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு

**திருவடிநிலைக்குப் புறப்படல்**

காலை 10.30 மணிக்கு **தீர்த்தோற்சவம்**

மாலை 3.00 மணிக்கு **கொடியிறக்கம்**

மஹோற்சவ குரு:

**சிவப்பிரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக்குருக்கள்**

அடியார்கள் வந்து அருள்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(96050) **தேவஸ்தான பரிபாலன சபை.**

---

# சோகச் சுமைகளுடன் பத்தாண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 01 - 02 - 1962

அரவத்தின் பிடியில் 10 - 12 - 1991

## அமரர் சுப்பையா ஆனந்தநடராஜா

(ஊரெழு மேற்கு, A.K. அரிசி ஆலை உரிமையாளர்)

திதி: 18-12-2001

**மாண்டவர் மீண்டும் பிறப்பதில்லை**
**ஆனால் பிறந்தவர் இறப்பதற்கு ஒருநாள் வரும்**
**அதுவரை.... கரடுமுரடான நம்**
**வாழ்க்கைப் பாதையில், பயணத்தைத் தொடர**
**உங்கள் நினைவுகளே எம் ஊன்றுகோல்கள்!!**

*மீசாலை வடக்கு,*
*வேம்பிராய்,*
*மீசாலை.*

(C/19788)

மனைவி: ஆ.குமுதமனோகரி
(ஆதார வைத்தியசாலை, மந்திகை)
மகள்: ஆ.கஸ்தூரி (கரவெட்டி)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 15 - 05 - 1933

உதிர்வு 15 - 12 - 2000

## திருமதி சவரிமுத்து யேண்டாக் (டெய்சி)

*ஓராண்டு சென்றாலும் இன்றும்*
*ஓயவில்லை உம் அன்பு நினைவு.*

*பொந்தி ஒழுங்கை,*
*பண்டத்தரிப்பு.*

(96035)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

---

# நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**ஸ்ரீ வராகி அம்பாள் தேவஸ்தானம், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

மேற்படி ஆலய புனரமைப்புக்காக மூன்று லட்சம் ரூபாவினை ஒதுக்கி அதில் ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவினை உடன் தந்துதவியமைக்காக



ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம்
கௌரவ
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும் -



நல்லூர் பிரதேச சபைத் தலைவர்
உயர்திரு.K.**மணிபல்லவராஜன்**
**[நிஷாந்துன்]**
அவர்களையும் -

*நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

- தர்மகர்த்தா

*ஸ்ரீ வராகி அம்பாள் தேவஸ்தானம்,*
*கொக்குவில் மேற்கு.*

(96046)

---

# ஓராண்டின் நீங்காத நினைவலைகள்



பூமியில் 02 - 08 - 1955

வானில் 29 - 12 - 2000

## அமரர் இளையவன் செல்வராசா

(சிமெந்துக் கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறை, முன்னாள் நிர்வாக உறுப்பினர் - தெல்லியூர் வாலிபர் ஐக்கிய சனசமூக நிலையம்)

**அப்பா!**

**பாசத்தின் சுமையோடு**
**கணப்பொழுதினில் மறைந்தீரே!**
**ஆறாத வேதனையில்**
**ஆண்டொன்று சென்றதப்பா!**
**மீளாத நினைவு தன்னில்**
**நெஞ்சம் தவிக்கின்றதே!**
**இறைவனுடன் சேர்ந்தெம்மை**
**வழிநடத்த வேண்டுகின்றோம்!**

உங்கள் பிரிவால் வாடும்:
***மனைவி, பிள்ளைகள்.***

*பொன்னாலை றோட்*
*(துர்க்கா மில் அருகில்),*
*மானிப்பாய்.*

(96040)

---

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா அழகானந்தசிவ ஐயர்

*(முன்னாள் ஊழியர், தெல்லிப்பழை ப.நோ.கூ.ச.)*

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அழகானந்தசிவ ஐயர் நேற்று (17-12-2001) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கேதாரகௌரியின் அன்புக் கணவரும், சிவகுமார்(ஆஸ்திரேலியா), நேமிநாதன் (Mascons Ltd Co.), விக்னேஸ்வரன் (Moratuwa University) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், சிவகௌரியின் அன்பு மாமனாரும், சகானா, கயாளன், கபாலினி ஆகியோரின் அன்புப் பேரனாரும் சச்சிதானந்தசிவம், சிவானந்தசிவம், கருணானந்தசிவம், சிவஅருட்செல்வம், சொர்ணகாந்தி, நாகபூசணி, புஷ்பமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகேஸ்வரி, சொர்ணாம்பாள் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(17-12-2001) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

*சுதுமலை,*
*மானிப்பாய்.*

(96045)

*தகவல்:*
**ரூபன்.**

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை நெடுந்தீவில் 16.12.2001 ஞாயிறு இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பியின் அன்பு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி பசுபதியின் அன்பு மருமகனும் இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மணிமேகலை, இந்திராணி, லோகேஸ்வரி, மோகனேஸ்வரி,பஞ்சேந்திரன், சாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலசிறியின் அன்பு மாமனாரும் யதுஷினி, அனுசாந் ஆகியோரின் அன்புப்பேரனும் சுப்பையா, காலஞ்சென்ற சின்னத்துரை, செல்லம்மா ஆகியோரின் சகோதரரும் பொன்னம்பலம், தனுஸ்கோடி, காலஞ்சென்ற சண்முகநாதன், தியாகராசா, ஐயாத்துரை, தில்லையம்பலம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நெடுந்தீவில் நேற்று நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.*

(C/19189)

தகவல்:
ம.நகுலசிறி

## எரிபொருள் தட்டுப்பாடு தொடர்ந்தால்

# தனியார் மினிபஸ் சேவைகள் குடாநாட்டில் ஸ்தம்பிக்கும் ஆபத்து

யாழ்ப்பாணம்,டிசெ.18

குடாநாட்டில் எரிபொருளுக்கு நிலவும் தட்டுப்பாட்டால் தனியார் மினிபஸ் சேவைகள் பெரிய அளவில் பாதிக்கப்படக் கூடும் என்று தனியார் மினிபஸ் உரிமையாளர்கள் எச்சரிக்கை வெளியிட்டுள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாட்டின் மத்தியில் சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டும் தனியார் மினிபஸ்களுக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை சுமார் 25 லீற்றர் டீசல் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படுகின்றது.

ஆனால் தனியார் மினிபஸ் ஒன்று சேவையில் ஈடுபட நாளொன்றுக்கு சுமார் 25 லீற்றர் டீசல் தேவைப்படுவதாகவும் -

ஆகவே மேலதிகமாகத் தேவைப்படும் பெருமளவு எரிபொருளை அதிக விலை கொடுத்து வெளியாரிடம் வாங்க வேண்டியிருப்பதாகவும் -

தனியார் மினிபஸ் உரிமையாளர்கள் கூறினர்.

இதனால் யாழ். மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சுமார் 200க்கும் மேற்பட்ட தனியார் மினிபஸ்களில் பெரும்பாலானவை சேவையில் ஈடுபடாமல் ஒதுங்கிவிட நேரிடக்கூடும் என்றும் -

அவ்வாறு நேரிட்டால் பொதுப் போக்குவரத்து பெரும் நெருக்கடியைச் சந்திக்கும் என்றும் -

அவர்கள் தெரிவித்தனர்.

அதிக விலைக்கு எரிபொருளை வாங்கித் தொடர்ந்து சேவையை நடத்த முடியாமல் பெரும்பாலான தனியார் மினிபஸ் உரிமையாளர்கள் திணறுவதாகக் கூறப்படுகிறது.

உடனடியாகக் கட்டண அதிகரிப்பைச் செய்வதும் சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ஒ-180-10-8)

# நிரந்தர சமாதானத்துக்கு யுத்த நிறுத்தமே ஒரே வழி

## மலையகத் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தல்

கொழும்பு,டிசெ.18

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டுமானால் முதற்கட்டமாக இருதரப்பினரும் பரஸ்பரம் யுத்த நிறுத்தம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் என்று மலையகத் தோட்டத்தொழிற் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இருதரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு, நம்பிக்கை ஆகியவற்றை ஏற்படுத்தி, அதன்மூலம் இருதரப்பினரதும் சமாதான ஆர்வத்தை வெளிநாட்டு அரசுகள் புரிந்துகொள்வதற்கு யுத்தநிறுத்தம் அவசியமானது என்றும்-

இந்த யுத்தநிறுத்தத்துக்கு ஒருதரப்பேனும் சம்மதிக்கா விட்டாலும்கூட இனப்பிரச்சினைத் தீர்வு என்பது வெறும் வாய்ப்பேச்சாகவே இருக்கும் என்றும் -

விவசாயத் தோட்டத்தொழிலாளர் சங்கத் தலைவர் ஆர்.எம்.கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

கடந்த காலங்களைப் போலல்லாது புரிந்துணர்வுடன் யுத்தநிறுத்தம் மேற்கொண்டு நல்ல மனதுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புதிய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தேசிய தொழிலாளர் சங்கத்தலைவர் கேட்டுள்ளார்.

(ஒ-4)


## உடன் தகவல் தரவும்

கடந்த 3.12.2001 இல் யாழ். நவீன சந்தை உட்புறத்தில் M.D.90 சிவப்பு நிறமுள்ள மோட்டார் சைக்கிள் (என்ஜின் இல. 2003657, செசி இல. 2003675) களவு போய்விட்டது. இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து உடன் கீழ்க்காணும் முகவரியாளருக்கு அறியத்தரவும்.

திரு.இ.இராஜேஸ்வரன்,
இல. 96, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம். T.P. 2491

(96041)

## ஸ்ரீ வல்லிபுர போட்டோ

- 12.12.2001 வரை எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.
- எதிர்வரும் 25.12.2001 அன்று படச்சுருளும் வீடியோக் கசற்றுகளும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும்.

புலோலி. 070-212720 (96053) நல்லூர். 021-2604

## வண்ணப்படக் கலண்டர்கள், டயறிகள்

உங்கள் வர்த்தக நிறுவனங்களின் பெயர்களைப் பதித்துப் பெற்றுக் கொள்ளவும். பில் புத்தகங்கள், விசிற் றிங்காட், (B) பாக் வகைகள் என்பன குறைந்த விலையில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள

தேவி அச்சகம்,
114/19, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/19796)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

புதிய வெளியீடு
அஜித், தேவயானி, பார்த்தீபன் நடித்த
நீ வருவாய் என
(ரீலஸ்)
சிறந்த பாடல்கள் நிறைந்த படம்
காட்சிகள்: 11.00, 2.30, 5.30

(C-19779)

## ராஜா யாழ்ப்பாணம்

ஐந்தாவது வாரமாக
கமல், மனீஷா மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
நாளை முதல்
குருசிஷ்யன்
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)

(C/19778)

## நாகம்ஸ் சுன்னாகம்

3ஆவது வெற்றி வாரம்
பிரசாந்த், ஷாலினி, மணிவண்ணன் நடித்த
பிரியாத வரம் வேண்டும்
(ரீலஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)

(96017)




## காரைநகர் சிவன் கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)

## திருவாதிரை உற்சவம் - 2001

*சிவநேயர்களே!*

உஷக்காலமாகிய மார்கழி மாதத்து பூரணையையடுத்து வரும் திருவாதிரை நட்சத்திரத்தை நிறைவாகக் கொண்டு முன் பத்து நாள்களுக்கு நடைபெறும். திருவாதிரை உற்சவம், சிவபெருமானது அருள் மூர்த்தமாகிய நடராஜ மூர்த்தத்திற்கே ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்று வருவது மரபு. இம்முறையும் திருவாதிரை உற்சவம் பெருஞ்சிறப்பாக நடைபெற கூத்தபிரானின் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் சிவநேயர்கள் யாவரும் பெரும் திரளாக வந்து திருவாதிரை உற்சவத்தைக் கண்டு, ஆர்த்திரா தரிசனம் பெற்று இம்மையில் கிடைத்தற்கரிய பெரும் சிவபுண்ணியப் பேறடைவார்களாக!

### திருவாதிரை உற்சவ விவரம்

**2001-12-21** விஷு வருடம் மார்கழி மாதம் 6ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவெம்பாவை ஆரம்பம்.
தினமும் காலை 7.00 மணிக்கு விசேட அபிஷேகம், திருவெம்பாவை ஓதல், வசந்த மண்டபப்பூசை, திருவீதி உலா.

**2001-12-29** விஷு வருடம் மார்கழி மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை
காலை 7.00 மணிக்கு வசந்தமண்டபப் பூசை, தேருக்கு சுவாமி எழுந்தருளல், பஞ்சரத பவனி.
பின்னிரவு 2.00 மணிக்கு ஆர்த்திரா அபிஷேகம். அதிகாலை 5.00 மணிக்கு சிறப்பு ஆராதனை, உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்.

**2001-12-30** விஷு வருடம் மார்கழி மாதம் 15ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை
மாலை 3.30 மணிக்கு திருவூடல், மாலை 4.30 மணிக்கு தீர்த்தோற்சவம்.

திருவிழா பத்துத் தினங்களும் மாணிக்கவாசகர் மடாலயத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

### விசேட பஸ் சேவை

திருவிழாக் காலத்தில் தினமும் காலை 7.00 மணிக்கு 782 பாதையிலும், காலை 8.30 மணிக்கு 786 பாதையிலும், 785 பாதையிலும் யாழ்.பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ்கள் ஈழத்துச் சிதம்பரம் ஊடாகச் சேவையில் ஈடுபடும். பஸ் டிப்போவில் இருந்து காலை 8.30, 9.30 மணிக்கும் வியாவிலில் இருந்து 9.00, 10.00 மணிக்கும் புறப்படும் பஸ் இந்த ஆலயத்தின் ஊடாக சேவையிலீடுபடும். பிற்பகல் 2.00 மணிக்கு ஆலயத்தில் 782, 786 பாதையூடாக பஸ் சேவை நடைபெறும்.
தேர்த் திருவிழா அன்று அதிகாலை 5.30 மணியிலிருந்து சகல சேவைகளும் ஆலயத்தினூடாக நடைபெறும்.

சிவன் கோயில்,
காரைநகர். (C/19790)

ஆ.அம்பலவிமுருகன்
மு.சுந்தரலிங்கம் ஆதீனகர்த்தாக்கள்.

## முடிவடைந்த நாடாளுமன்றத் தேர்தலின் அபிப்பிராயம்

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் பற்றிய அபிப்பிராயங்கள் பொதுமக்களிடம் இருந்து கோரப்படுகின்றன. இது விடயமாக **ஈ.பி.டி.பியின் மாவட்ட அமைப்பாளர் K.V.குகேந்திரன் (ஜெகன்)** அவர்கள் பொதுமக்களின் அபிப்பிராயங்கள், ஆலோசனைகள் எவ்வாறாக இருக்கும் எனத் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளார். எனவே இது விடயமாக பொதுமக்கள் தமது அபிப்பிராயங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

தலைமைப் பணிமனை,
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,
இல.273, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி,
யாழ்.தலைமைப் பணிமனை.

(C/18797)

## காணவில்லை



## கணபதிப்பிள்ளை நடேசு

வயது - 75 பொது நிறம்

சித்தசுவாதீனம் அற்றவர், கடந்த சனி காலை 10.00 மணியில் இருந்து காணவில்லை. இறுதியாக வெள்ளை நிற ரீசேட்டும் பச்சை கலர் சாரமும் அணிந்திருந்தார். நடக்கும் பொழுது தாண்டி நடப்பவர், காது கேட்பது குறைவு. இவரைக் கண்டவர்கள் தயவு செய்து பின்வரும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

த. பார்த்திபன்
தல்லையப்புலம், துன்னாலை தெற்கு, கரவெட்டி.

(96052)

## இதய அஞ்சலிகள்

எமது பணிமனையில் எழுதுநராகப் பணியாற்றும்
செல்வி க.இந்திராணி அவர்களின்
அன்புத் தந்தையார்

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்தசெய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன், அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உதவிஅரசாங்க அதிபரும்,
ஊழியர் நலன்புரிச்சங்கமும்.
உதவிஅரசாங்க அதிபர் பணிமனை, நெடுந்தீவு.

(C/19791)

## கண்ணீர் அஞ்சலி

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆங்கில ஆசிரியை
திருமதி விமலேஸ்வரி பாலச்சந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி முருகேசு சிவகாமிப்பிள்ளை

அவர்கள் 16-12-2001இல் அமரத்துவம் அடைந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் இழப்பால் துயருறும் அமரரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
*யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி.*

(96039)

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா பொன்னையா

யாழ்ப்பாணம், பழம் றோட், கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவி திருமதி பொன்னம்மா 15-12-2001 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி செ.செல்லம்மா, காலஞ்சென்ற திருமதி சி.அன்னம்மா, திருமதி வை.கண்மணி, செ.வைரமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி பா.தனேஸ்வரியின் அன்புத் தாயாரும் தனபாலசிங்கத்தின் சிறிய தாயாரும், பாலசுந்தரத்தின் மாமியாரும் திருமதி சுதர்சன், பிரியதர்ஷினி, ராஜ்குமார், ரோகினி ஆகியோரின் பேர்த்தியாரும் நிசாகரின் பூட்டியாரும் அவார்.

அன்னாரின் பூதவுடல் 16.12.2001 ஞாயிற்றுக்கிழமை பொரளை மன்னம் பெருமா மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*F/G/1, டி மெல் தொடர்மாடி,*
*கிராண்ட்பாஸ் றோட்,*
*கொழும்பு-14, தொ.பே.: 344779.* (C/19793)

தகவல்:
திரு.திருமதி பாலசுந்தரம்
மகள், மருமகன்.

அடாவடித்தனங்களுக்கு முடிவில்லை

# அம்பாறை வீரமுனையில் 98 இல் நடந்த சம்பவம்

மட்டக்களப்பு,டிசெ.18

அம்பாறை வீரமுனைப் பகுதியில் இரு முஸ்லிம் இளைஞர்கள் அதிரடிப்படையினரால் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்கள் அப்பகுதியில் முன்னரும் நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்ற சம்பவம் ஒன்று 1998 ஆம் ஆண்டிலும் வீரமுனையில் இதே இடத்தில் நடைபெற்றது.பாண்டிருப்பைச் சேர்ந்த சதாசிவம் சஞ்சீவன் என்ற மாணவனை கல்முனைப் பொலீஸார் கைதுசெய்து 23.7.1998 அன்று அம்பாறைக்கு கொண்டுசெல்லும் வழியில் வீரமுனையில் புலிகளுடன் நடந்த மோதலில் இவர் இறந்ததாகக்கூறி சடலத்தை ஒப்படைத்தனர். மரண விசாரணைகளை நடத்திய மாவட்ட சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சந்திரபாலன் சமர்ப்பித்த அறிக்கையில் இறந்த சஞ்சீவன் அருகில் வைத்தே சுடப்பட்டுள்ளார் என்றும் இறப்பதற்கு முதல் அவர் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்தார் எனவும் தெரிவித்திருந்தார். சஞ்சீவனின் நாக்கு வெட்டப்பட்டிருந்ததாகவும் அடிகாயங்கள் காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். இந்த மாணவரின் மரண விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணைகளிலும், இரசாயன பகுப்பாய்வு அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கைகளிலும் பொலீஸாரே சுட்டதாக நிருபிக்கப்பட்டதையடுத்து சம்பந்தப்பட்ட பொலீஸாரை விசாரணை செய்து அவர்களை நீதிமன்றில் நிறுத்துமாறு கல்முனை மாவட்ட நீதிபதி கடந்த இரு வருடங்களுக்கு முதல் பொலீஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டபோதிலும் இதுவரை சம்பந்தப்பட்ட கல்முனைப்பொலீஸார் மீது உரிய சட்டநடவடிக்கை எடுக்கப்படவும் இல்லை, நீதிமன்றில் நிறுத்தப்படவும் இல்லை, கடந்த மூன்று வருடங்களுக்கு முதல் சஞ்சீவனுக்கு நடந்த கதியே நிந்தவூர் இளைஞர்களுக்கும் நடைபெற்றிருப்பதாக கல்முனையில் உள்ள மனித உரிமைகள் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்தார். (ஜ-21)

## ஜனாதிபதி மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய நாடுகளின் தூதர்களையும் சந்தித்து தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள ஆணை தொடர்பாக எடுத்துக் கூறுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமரைச் சந்திக்கும்போது கீழ்க்கண்ட கோரிக்கையையும் கூட்டமைப்பு முன்வைக்க விரும்புகின்றது.

★ தீவகத்துக்கு பிரசாரத்துக்குச் சென்ற தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து விசாரிக்க விசாரணைக்குழு அமைக்க வேண்டும்.

★ தடுப்புக்காவலில் உள்ள தமிழ் இளைஞர்களை உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் -

★ ஆயுதக்குழுக்கள் வைத்துள்ள ஆயுதங்களை உடன் களையவேண்டும்

★ வவுனியாவில் 'பாஸ்' நடைமுறையை உடன் நீக்கவேண்டும். எரிபொருள் விநியோகக் கட்டுப்பாட்டையும் நீக்கவேண்டும்.

★ யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்வதற்கான பயண அனுமதி முறையை ரத்துச்செய்ய வேண்டும்.

இதேவேளை -

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் இன்று காலை கொழும்பில் தமிழா விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் யார் என்பது பெரும்பாலும் இன்று முடிவு செய்யப்படும்.

கூட்டமைப்பு அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது. (ஒ-3)

## நிமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவகத்தில் கடந்த 28ஆம் திகதி தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியைச் சேர்ந்த ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜன் மற்றும் நெப்போலியன் ஆகியோரைக் கைது செய்யும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் இவர்கள் மூவரும் நெடுந்தீவில் இருப்பதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

நெடுந்தீவு, இராணுவத்தினரதோ, கடற்படையினரதோ, பொலீஸாரினதோ கட்டுப்பாட்டில் இல்லை. ஈ.பி.டி.பியின் ஆதிக்கத்தில் உள்ளது.

- இப்படி பொலீஸ் அத்தியட்சகர் குடாஹெட்டி தெரிவித்தார்.

மேற்படி மூன்று சந்தேகநபர்களில் ஒருவரான மதனராஜன் கடந்த தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

## வாக்களிப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூட்டமைப்பு பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். இதே விடயம் குறித்து தேர்தல் வன்செயல் கண்காணிப்புக் குழுவும் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துவருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# கட்டுக்கட்டாக வாக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் சின்னத்திற்கும் அதில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மூன்று வேட்பாளர்களின் இலக்கங்களுக்கும் புள்ளடியிடப்பட்டிருந்தன.

பொலீஸார் அவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

வாக்குச் சீட்டுப் புத்தகங்கள் போலியானவை அல்ல என்றும் உண்மையான புத்தகங்களே அவை என்றும் வவுனியா தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இந்த வாக்குச் சீட்டுக்கள் புத்தகமாக எவ்வாறு வெளியே வந்தன என்பது மர்மமாகவே இருக்கிறது. வவுனியா செயலக உயரதிகாரிகளின் அனுசரணையின்றி இந்த வாக்குச் சீட்டுக்கள் வெளியே வந்திருக்க முடியாதென்றே பலரும் தெரிவிக்கின்றனர்.

தேர்தலுக்கு முன்பே வாக்குச் சீட்டுக்கள் புத்தகம், புத்தகமாகக் கட்டப்பட்ட நிலையிலேயே வெளியே அள்ளிச் செல்லப்பட்டுவிட்டன என்றும், அவை தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்கு சார்பாகப் பயன்படுத்தப்பட்டன! என்றும் ஒரு தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியாக இது இருக்கலாம் என்றும் கருதப்படுகின்றது.

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் சின்னம் மற்றும் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் இலக்கங்களுக்கு புள்ளடியிடப்பட்ட வாக்குச் சீட்டுப் புத்தகங்களை நகரின் மத்தியில் உள்ள பஸ் நிலையப் பகுதியில் போட்டுவிட்டுச் சென்றதன் நோக்கமும் இதுவாக இருக்கும் என்று கருதப்படுகிறது. (ஐ-164)

## சட்டவிரோத..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளனர்.

அவற்றையெல்லாம் அரசிடம் ஒப்படைப்பதற்கு அவர்களுக்கு பொது மன்னிப்புக் கால அவகாசம் வழங்கப்படவுள்ளது. அந்த அவகாசத்தை உதாசீனப்படுத்துபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்.

இவ்வாறு உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ-4)

# அதிரடிப்படையினருக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் பயங்கர ஆயுதங்கள் இருந்தன என்று விசேட அதிரடிப்படையினர் தரப்பில் தகவல் வெளியிடப்பட்டது. ஆனால் காதல் பிணக்கு விவகாரத்தின் எதிரொலியாகவே இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்டன என்று வேறு தகவல்கள் தெரிவித்தன.

இருவருக்கும் கைவிலங்குகள் பூட்டப்பட்டன. நேற்று முன்தினம் மாலை விசேட அதிரடிப்படையினரால் அவர்கள் வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர். அம்பாறையில் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைப்பதற்காகவே கூட்டிச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்மாந்துறை வீரமுனை ஆண்டிர சந்தியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் கைவிலங்கிடப்பட்ட நிலையில் இருவரும் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதாலேயே இருவரும் உயிரிழந்தனர் என்று விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். ஆனால் இப்பகுதிப் பொதுமக்கள் மத்தியில் கருத்து வேறுபாடு நிலவியது. விசேட அதிரடிப்படையினரே இருவரையும் சுட்டுக் கொன்றுவிட்டு குற்றத்தைப் புலிகள் மீது சுமத்துகின்றனர் எனப் பரவலாகப் பேசப்பட்டது. இதனால் மக்கள் மத்தியில் கடும் சீற்றமும் எரிச்சலும் நிலவின.

சம்மாந்துறை மாவட்ட ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனைக்காகச் சடலங்கள் வைக்கப்பட்டிருந்தன.

நேற்றுக் காலை மேற்படி ஆஸ்பத்திரியில் பெரும் எண்ணிக்கையான முஸ்லிம் இளைஞர்களும் பொதுமக்களும் திரண்டு "இந்த இளைஞர்களைப் புலிகள் கொல்லவில்லை. விசேட அதிரடிப்படையினரே கொன்றனர்" என்று தெரிவித்துப் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கல்முனை மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான வே.கணபதிப்பிள்ளை சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு வருகை தந்து சடலங்களைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை திகாமடுல்ல மாவட்டத்தின் முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.அன்வர் இஸ்மாயிலும் அங்கு வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களின் உணர்வுகளைக் கேட்டறிந்தார். இந்த மரணங்களில் சந்தேகம் இருப்பதாகக் கருத்து வெளியிட்டு மேல் நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரினார்.

சம்மாந்துறை மாவட்ட ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை நடத்த வசதியின்மையால் சடலங்களை கலமுனை தெற்கு ஆதார வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.

அதன்படி சடலங்களைக் கொண்டு செல்ல பொலீஸார் முனைந்தபோது திரண்டிருந்த பொதுமக்கள் வெகுண்டெழுந்து அதைத் தடுக்க முற்பட்டனர்.

அவ்வேளை ஆஸ்பத்திரி வளவின் ஒருபுறம் நின்றிருந்த விசேட அதிரடிப்படையினர் வானத்தை நோக்கிச் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். பொதுமக்களை நெருங்கி பொல்லுகள் தடிகளால் அவர்களைத் தாக்கத் தொடங்கினர். மக்கள் சிதறி ஓடினர்.

பொதுமக்கள் ஓடிய திசையை நோக்கியும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

எம்.பி.அன்வர் இஸ்மாயில் இடையில் புகுந்தார். தனது சட்டையைக் கழற்றி தன்னைச் சுடும்படியும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதை அடுத்து வேட்டுக்கள் ஓய்ந்தபோதும் பின்னர் ஆங்காங்கே வீதிகளில் புகுந்து படையினர் வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் இருந்தனர். சுமார் 25 மோட்டார் சைக்கிள்களும் 250சைக்கிள்களும் இதனால் சேதமடைந்தன.

துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த 11 பொதுமக்கள் சம்மாந்துறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுப் பின்னர் கல்முனை, மட்டக்களப்பு ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்பட்டனர். சிறுகாயங்களுக்கு உள்ளானோருக்கு சம்மாந்துறை ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### ஹர்த்தால் அனுஷ்டிப்பு

முஸ்லிம் இளைஞர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, மாளிகைக்காடு, சாய்ந்தமருது, நிந்தவூர் போன்ற பகுதிகளில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் மூடிக்கிடந்தன. வழமைநிலை பாதிக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச செயலகத்துக்கு எதிரே கல்முனை நியூ ஈஸ்டேர்ன் பஸ் கம்பனிக்குச் சொந்தமான பஸ் ஒன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

ஆங்காங்கே வீதித்தடைகள் போடப்பட்டு போக்குவரத்துத் தடுக்கப்பட்டது. ரயர்கள் வீதிகளில் போட்டு எரிக்கப்பட்டன. நிந்தவூரில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றும் நடத்தப்பட்டது.

விசேட அதிரடிப்படையினரின் கட்டுமீறிய நடவடிக்கைகள் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு தெரிவிக்கப்பட்டது. அவர் பிரதமர் ரணிலுடன் தொடர்பு கொண்டார். அதையடுத்தே அதிரடிப் படையினரின் அத்துமீறிய நடவடிக்கைகள் தணிந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

நிந்தவூர்ப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் பொதுமக்கள் காயமடைந்தது தொடர்பாக விசாரணை நடத்தி உடன் அறிக்கை சமர்ப்பிக்கும்படி கிழக்குப் பிராந்திய பொலீஸ் அத்தியட்சகரை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கோரியுள்ளார்.

முஸ்லிம் மக்கள் மத்தியில் நேற்று மாலை அமைதி தென்பட்டாலும் நிலைமை நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது என்று எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-ஒ-3-4)


LOGIC 2002/2003 APR.

KAMAL யா/இந்து மகளிர்

* Paper Classes -2002
Sat., Sun. 4 p.m.
* குறீட்டு அளவைவியல் -2003
Sat., Sun. 2 p.m.
* நிகழ்தகவு -2002
Tue., Thu. 4 p.m.

மதுபாரத் கல்வி நிறுவனம்
குமாரசாமி வீதி. (96035)

எமது பிரமிட் & Five Star வீடியோ CD வெளியீடுகள்
☆ தவசி
☆ ஆளவந்தான்
வீடியோ விஷன்
(C/19794) யாழ்ப்பாணம்.

வணிகக் கல்வி
A/L 2002
முழுப்பாடப்பரப்புக்குமான PAPER CLASS
By:- திரு.ஸ்.பசோ
ஆரம்பம் - நாளை - 7 - 8 a.m.
சவரிதாஸ்
இணுவில்.
(96047)

இன்றைய ஓடியோ CD வெளியீடு
* புன்னகை தேசம்
* ரெட்
* காதலே சுவாசம்
வண்ணக் கவர்களுடன் ஓடியோ CD கஸட் விற்பனைக்குண்டு.
மூர்த்தி வீடியோ
(C/19795) மானிப்பாய்.

மெய்ஞான ஒளி மிசன்
TRUE LIGHT MISSION
(சிறுவர் பராமரிப்பு இல்லம்)
இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு தாய் - தந்தை இல்லாத சிறுவர்களுக்கு முதலிடம் கொடுத்து தெரிவு செய்கின்றோம்.
வயது எல்லை 7-15 வரைக்கும்.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
21.12.2001ஆம் திகதிக்கு முன்னர் காலை 8.00 - பகல் 11.00 வரை உங்களுடைய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
குறிப்பு: மேற்படி நிறுவனத்திற்கு, பராமரிப்பதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பெண் ஊழியர் தேவை.
மெய்ஞான ஒளி மிசன்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
கந்தரோடை சுன்னாகம்.
(96054)

சுனில் ஆட்ஸ்
02.12.2001 வரை ஸ்ரூடியோ ஒப்படைத்த படச்சுருள்களின் படங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
19.12.2001 அன்று படச்சுருள்கள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
❖ வீடியோ கசட்டுகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.
சுனில் ஆட்ஸ்
205, ஸ்ரான்லி றோட், யாழ். (பொண்ட் கல்வி நிலையத்திற்கு முன்பாக)
Note:- CDஇல் இருந்து CDஇற்கு பாடல் பதிவு செய்திட 200/= மட்டுமே
❖ Osaki, Maruni, Philips, MP3 பிளேயருக்கு ஏற்ற வகையில் MP3 பாடல் பதிவு செய்து தரப்படும்.
❖ Computer Photo Glossy Paper இல் அல்பம் பேஜ் பிரிண்ட் செய்து தரப்படும். (C/19792)

CLOSING DOWN SALES
COST TO COST SALES!
COST TO COST SALES!
விற்றுத் தீர்த்தல்!!
சிறியோர் முதல் பெரியோர் வரை இருபாலாருக்குமான சகலவிதமான றெடிமேட் புடைவை வகைகளும் 16.12.2001 ஞாயிறு தொடக்கம் 31.12.2001 திங்கள் வரை குறைந்த விலையில் விற்றுத் தீர்க்கப்படவுள்ளன.



☆பேபி சூட் ☆புறக் ☆பஞ்சாபி ☆சேட்
☆பேபி புறக் ☆ஸ்கேட் & பிளவுஸ் ☆சோளிகிற் ☆T.சேட்
மற்றும்
சாறிவகைகள் அனைத்தும்
சங்கமம் ரெக்ஸ்
54A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். (C-19776)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.